GOKULAM
மே 2007 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

கோடையிலும் குளு! குளு!



கோகுலம் 25

விடுமுறைச் சிறப்பிதழ் - 2



"கடற்கரைக்குப்
போகலாம்;
கால்களை
நனைக்கலாம்!"

என்ஜாய் ஹாலிடேஸ்!



"மணல்
வீடு கட்டலாம்;
கடல் நீரை
அளக்கலாம்!"



"பூங்காவுக்குப்
போகலாம்;
குதூகலமாய்
ஆடலாம்!"

கல்கி
கோகுலம்
மே 2007 ■ மலர்:25 ■ இதழ்: 4

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்

விடுமுறைச் சிறப்பிதழ்-2



28 கோடையில் குளுகுளுவென இருக்க டாக்டர் தரும் டிப்ஸ்!



4 இருட்டூருக்கு ஒளி கிடைக்க பூச்சிகள் போட்ட ப்ளான்!



33 அறிவுக்கும் அசத்தலுக்கும் சூப்பரான 2-இன் -1 பக்கங்கள்!



65 கோகுலம் வாசகர்களை இணைக்கப் போகும் சிறுவர் சங்கம்!

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட்லிமிடெட்டிற்காக பரதன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

உதவி ஆசிரியர்:
ஆரணி யுவராஜ்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன், எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யுஎஸ். டாலர்

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...



விடுமுறையை உற்சாகத்துடன் கழித்துக் கொண்டிருக்கும் அனைவருக்கும் வாழ்த்துகள். இது போன்ற சமயத்தில் பொழுது போக்குக்கு மட்டுமின்றி சிந்தனைக்கும் நேரத்தைச் செலவிடுங்கள்.

மனிதனிடமுள்ள மிகப் பெரிய சொத்து சிந்தனை. தங்கச் சுரங்கம் கூட வற்றலாம். சிந்தனைச் சுரங்கம் வற்றாது. இன்று நாம் பயன்படுத்தும் அனைத்துப் பொருட்களும் பல்வேறு விஞ்ஞானிகளின் சிந்தனையில் உதித்தவைதான். புதிது புதிதாகச் சிந்திக்க வேண்டும். அப்படி சிந்தித்ததை ஆக்க பூர்வமான விஷயத்துக்குச் செயல்படுத்த

சிந்தனைச் சுரங்கம்!



வேண்டும். அதனால் நாடும் முன்னேறும்; நாமும் முன்னேறலாம்.

உங்கள் அபிமான கோகுலத்தையும் அப்படித்தான் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். மாதத்துக்கு மாதம் ஏதாவது புதிதாகச் செய்ய வேண்டுமெனச் சிந்தித்துச் செயல்படுத்துகிறோம். இந்த மாதம் கோகுலம் தீம் பார்க்கில் மாற்றம் செய்து ட்ரீ இன் ஒன் பக்கங்களாகக் கொடுத்திருக்கிறோம். அதுபோல த்ரீ இன் ஒன் போட்டியை அறிவித்திருக்கிறோம்.

நீங்களும் சிந்தியுங்கள். கோகுலத்தில் இன்னும் என்ன செய்யலாம், எப்படிச் செய்யலாமெனச் சிந்தியுங்கள். அதை எங்களுக்கு எழுதுங்கள். சிறந்த ஆலோசனைகள் வரவேற்கப்படும். பரிசும் அளிக்கப்படும்.

உங்களால் முடியும். சிந்தியுங்கள்; செயலாக்குங்கள். வெற்றி காணுங்கள்!

அன்புடன்
கோகு



அட்டையிலும் இங்கும்:
எஸ்.பவித்ரா, சயூஜ்
படங்கள்: **ஸ்ரீஹரி**

ஒளி கிடைத்தது!

'இருட்டூர்' என்ற இடத்தில் நிறைய பூச்சிகளும் பறவைகளும் வசித்தன. மாலை நேரமானால் அங்கே இருள் சூழ்ந்து விடும். அதனால் பறவைகளும் பூச்சிகளும் வெளியே வர முடியாமல் தங்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கி விடும். அதிலும் அமாவாசையின் போது நிலவும் இல்லாததால் பறவைகள் மிகவும் சிரமப்பட்டன.

'இந்த இடத்துக்கு ஒளியைக் கொண்டு வர வேண்டும். அதற்கு என்ன செய்யலாம்?' என்று யோசித்தன. இதற்காக ஓர் ஆலோசனைக் கூட்டம் தொடங்கியது. எல்லாப் பறவைகளும், பூச்சிகளும் கூடி தங்கள் ஆலோசனைகளைச் சொல்லத் தொடங்கின.

எறும்பு, கருவண்டு, சிலந்தி, வண்ணத்துப்பூச்சி என ஆளாளுக்கு ஒரு யோசனையைத் தெரிவித்தன. எதுவுமே சரிப்படவில்லை. அப்போது மரவட்டை முன்னால் வந்தது.

"ஒருமுறை நான் ஒளியூர் என்ற இடத்துக்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு வித்தியாசமான பூச்சியைப் பார்த்தேன். அதன் பெயர் மின்மினி. அதன் உடலிலிருந்து வெளிச்சம் வருகிறது. அது போன்ற மின்மினிகள் அவ்வூரில் நிறைய உள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே வரச் செய்தால் ஒளி கிடைக்கும்" என்றது மரவட்டை.

"நல்ல யோசனை! ஆனால் அவற்றை இங்கே எப்படி வரவைப்பது?" என்று கேட்டது கருவண்டு.

"அந்த இடத்தின் தலைவன் தேனீ. நம் ஆட்களில் ஒருவரை அங்கே தூது அனுப்பி, கேட்போம்" என்றது சிலந்தி.

உடனே இவர்களின் தலைவனான வெட்டுக்கிளி "சரியான யோசனை. நூறு மின்மினிப் பூச்சிகளை அனுப்பி வைக்கவும். இல்லையென்றால் உங்கள் மீது படையெடுப்போம் என்று எச்சரிப்போம்" என்றது.

"படையா? தலைவா, அதெல்லாம் வேண்டாம். இந்தப் பிரச்னையை நட்புடனே அணுகுவோம். படை, சண்டையெனச் சென்றால் இழப்புதான்" என்றது மரவட்டை.



"நீ வாயை மூடு! ஒரு யோசனையைச் சொன்னாயல்லவா? அத்துடன் நிறுத்திக் கொள். அதை எப்படிச் செயல்படுத்துவது என்பதை நான் பார்த்துக்கொள்கிறேன். ஏனென்றால் நான்தான் உங்களுக்குத் தலைவன்'' என்று கோபத்துடன் சொன்னது வெட்டுக்கிளி.

மரவட்டை மௌனமாகி விட்டது. வெட்டுக்கிளி சொன்னதுபோல ஒரு செய்தி தயாரிக்கப்பட்டது. காகம் அதனை எடுத்துக் கொண்டு ஒளியூருக்குச் சென்றது. அங்கிருந்த தேனீ தலைவனைச் சந்தித்து விஷயத்தைத் தெரிவித்தது.



"இருட்டூரைப் பற்றி நானும் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் உங்கள் தலைவர் இவ்வளவு ஆணவக்காரராக இருப்பாரென எதிர்பார்க்கவில்லை. சில மின்மினிகளை உங்கள் இடத்துக்கு அனுப்பினால் எங்களுக்கு எதுவும் குறைந்து விடாது. ஆனால் இப்போது அனுப்ப முடியாது" என்றது தேனீ.

"ஏன்?" என்று கேட்டது காகம்.

"இப்போது அனுப்பினால் உன் தலைவனின் மிரட்டலுக்குப் பயந்து அனுப்புவது போலாகிவிடும். இங்குள்ளோர் என்னை மதிக்க மாட்டார்கள். அதனால் நீ சென்று உன் தலைவனையே அனுப்பு. அவர் இங்கே வந்து பணிவுடன் கேட்டால் அனுப்புகிறேன்" என்றது தேனீ.

"ஆம்! எங்கள் தலைவர் சொல்வது தான் சரி. உங்கள் தலைவருக்கு உண்மையிலேயே உங்கள் மீதெல்லாம் அக்கறை இருந்தால் பணிவோடும் அன்போடும் வந்து கேட்கட்டும்" என்று அங்கிருந்த மற்ற பூச்சிகள் ஆமோதித்தன.

அங்கிருந்து கிளம்பிய காகம் இருட்டூரை அடைந்து வெட்டுக்கிளி முன் வந்தது. "தலைவா! ஒளியூர்க்காரர்களுக்கு ரொம்பத் திமிர். நீங்களே நேரில் சென்று, அவர்களைப் பணிவுடன் வணங்கி, 'மின்மினி வேண்டும்' என்று கெஞ்சினால்தான் அனுப்புவார்களாம்" என்றது.


"ஓஹோ! அவர்களுக்கு அவ்வளவு திமிரா? விடக் கூடாது! நாம் யார், நமது பலம் என்ன என்பதை அவர்களுக்குப் புரியவைக்க வேண்டும். உடனே ஒளியூருக்குப் படையெடுப்போம். மின்மினிகளைச் சிறையெடுப்போம்" என்று முழக்கமிட்டது வெட்டுக்கிளி.

"தலைவா, அவசரப்பட வேண்டாம்! நிதானமாகச் செயல்படுவோம்" என்றது புறா.

"இனி பேச்சுக்கே இடமில்லை, போர் தான்" என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டது வெட்டுக்கிளி.

தலைவனின் பேச்சை மீற முடியுமா? அடுத்த நாள் வெட்டுக்கிளியின் தலைமையில் ஒளியூரை நோக்கிப் படையெடுப்பு நடந்தது. விஷயம் தெரிந்து ஒளியூரிலும் தேனீ தனது கூட்டத்துடன் தயாராக இருந்தது.

கடுமையான சண்டை நடந்தது. இரண்டு பக்கமும் உயிர்ச் சேதம் நிகழ்ந்தது. தவிர, நிறையப் பூச்சிகளுக்குக் கை, கால்கள், இறக்கை உடைந்து முட



அனைவரும் உறவினர்
ஆட்சியைப் பொதுமைசெய்
இசைமொழி மேலதே
ஈதல் இன்பம்
உடைமை பொதுவே



எஸ்.செந்தில்நாதன், நான்காம் வகுப்பு,
சர்.சிவசுவாமி கலாலயா,
மயிலாப்பூர்.

மாயின. அவை வலியால் துடித்தன. அவற்றுக்குச் சிகிச்சையளிக்க மருந்தூரிலிருந்து ஒரு குழு வந்தது.

"இப்படியா மடத்தனமாகச் சண்டையிடுவது? இதனால் என்ன பலன்? போன உயிர்களைத் திரும்ப கொண்டு வர முடியுமா? அல்லது துடிக்கும் இவர்களின் வலியை நீக்க முடியுமா?" என்று கேட்டது மருந்தூர் தலைவன் கொக.

"இப்போதும் ஒன்றும் குறைந்துவிடவில்லை. நீங்கள் உத்தரவிட்டால் நான் சென்று தேனீயிடம் சமாதானமாகப் பேசுகிறேன்" என்றது புறா.

வெட்டுக்கிளிக்குத் தனது தவறு புரிந்தது. நானும் வருகிறேன். இருவருமே தேனீயிடம் பேசுவோம்" என்றது.

இரண்டும் தேனீயைச் சந்தித்தன. புறா விஷயத்தைச் சொன்னது. வெட்டுக்கிளி தனது செயலுக்கு மன்னிப்புக் கேட்டது.

"பரவாயில்லை, நடந்ததை மறந்துவிடுவோம். சில மின்மினிகளை அனுப்புகிறோம். இப்போது காயமடைந்துள்ள உங்கள் ஆட்களெல்லாம் குணமடையட்டும். அதுவரை எல்லோரும் இங்கே விருந்தாளிகளாக இருங்கள்" என்றது.

தேனீயின் உயர்ந்த குணத்தைப் பார்த்து வெட்டுக்கிளி வியந்தது. சில நாட்கள் அங்கேயே கூட்டத்துடன் தங்கியது. பிறகு மின்மினிப் பூச்சிகளுடன் இருட்டூரை அடைந்தது.

அங்கிருந்த மற்ற பூச்சிகள் கோலாகலத்துடன் வரவேற்றன. பெரிய விழாவே நடத்தி மின்மினிகளைச் சந்தோஷப்படுத்தின. மின்மினிகளும் உற்சாகத்துடன் அங்கும் இங்குமாகப் பறந்தன.

இருட்டூர் ஒளி பெற்றது. பிறகு இரவு நேரங்களில் எந்தச் சிரமமுமின்றி அவை வாழ்ந்தன.

சுழல் கோப்பை!



கோகுலம் இதழில் ஓராண்டில் எந்தப் பள்ளியின் படைப்புகள் அதிகம் இடம் பெறுகின்றனவோ அந்தப் பள்ளிக்குச் சுழல் கோப்பை வழங்கி வருகிறோம். இந்த ஆண்டு உங்கள் பள்ளிக்குச் சுழல் கோப்பை கிடைக்க, படைப்புகளை உடனே அனுப்பி வையுங்கள். உங்கள் நண்பர்களையும் எழுதச் சொல்லுங்கள்.



ஊஞ்சலிலே

"புன்னை மர நிழலு
கண்ணுக்குள்ள குளிரு...
மரக்கிளையில் ஊஞ்சல் கட்டி
பரபரன்னு ஆடுதுங்க தளிரு..."

– ஒரு சிறுமியின் இனிய குரலில் காற்றில் மிதந்து வந்தது பாடல். தேசிய நெடுஞ்சாலையின் சாலையோரம். புன்னை மரம். சிறுவர் சிறுமியர் பட்டாளம். மரக்கிளையில் அம்மாவின் சேலை. அதுவே அவர்களுக்கு அழகிய ஊஞ்சல்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ நாச்சிப்பட்டு கிராமம். ஊஞ்சல் விளையாட்டு. திவ்யா, ஊஞ்சலில். அந்த ஊஞ்சலை இழுத்து விடுவோர் மணிகண்டன், சிவரஞ்சனி. ஒருவர் மாற்றி ஒருவர் ஊஞ்சல் விளையாட்டில். சிரிப்பும் கும்மாளமும் ஊஞ்சலுடன் சேர்ந்து ஆடின.

மேலும் கீழுமாக இழுத்து ஊஞ்சலாடும் ஆனந்தம். படபடப்பு பரவசம், அத்தனையையும் அள்ளித் தரும். அற்புத விளையாட்டு. 'நாங்கொஞ்ச நேரம் உக்கார்றேன் அக்கா' என்று பற்ற பிள்ளைகள் வந்து கெஞ்சும். ஊஞ்சல் விளையாட்டு தனி சுகம்.

"இது திருவண்ணாமலை திண்டிவனம் மெயின் ரோடு. பஸ்சுங்க எப்பவும் போய்ட்டே இருக்கும். ஊஞ்சல் விளையாடும்போது கம்மான்னு இருக்க மாட்டோம். பஸ்சுல போற அத்தை – மாமாவுக்குக் கையசைப்போம். அவுங்களும் கையசைப்பாங்க. ஆடும்போது அப்பிடியே

எங்களுக்கு இன்னும் உயரத்துல பறக்குற மாதிரி கிர்ருனு ஆயிடும்!'' என்கிறான் மணிகண்டன். நான்காம் வகுப்பு படிப்பவன்.

''ஊஞ்சல்ல முதல்ல யாரு உக்கார்றதுன்னு பெரிய சண்டையே வந்துடும். எங்க மாமா வந்து ஊஞ்சலை அவுத்துட்டுப் போய்டுவாரு. சரின்னு வுட்ர மாட்டோம் நாங்க. எங்க அத்தை கிட்டே போயி நச்சரிப்போம். அப்புறம் என்ன? மாமாவே மறுபடியும் வந்து ஊஞ்சல் கட்டுவாரு!'' என்று கூறுகிறாள் ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிவரஞ்சனி.

ஒய்யாரமாய்...



''இன்னும் நீங்க ஊருக்குள்ள போகணும். அங்கனப் பார்த்தா சில பையன்ங்க, மரக்கிளையில சைக்கிள் டயரு ஊஞ்சல் ஆடுவான்ங்க. சைக்கிள் டயரை வட்டம் வட்டமா இணைச்சு ஊஞ்சல் கட்டி விட்டிருப்பாங்க. அது கொஞ்சம் ஆபத்தானது. மரக்கிளை ஊஞ்சலுக்கு அம்மா சேலைதான் பாதுகாப்பனது. புள்ளைங்களுக்கு முதல் பாதுகாப்பே அம்மாதானே! இந்த ஊஞ்சல் விளையாட்டுல, பயம் பறந்து போகும். உயர உயரப் போகும்போது, நாம எதையோ ஜெயிச்ச மாதிரி இருக்கும். தன்னம்பிக்கை தர்றது இந்த ஊஞ்சல் விளையாட்டு. நீங்களும் ஒரு முறை ஊஞ்சல்ல ஆடிப் பாருங்கன்னு!'' சொல்கிறாள் ஏழாம் வகுப்பு படித்து வரும் திவ்யா.

நீங்கள் கிராமத்தில் வசிப்பவரா? உங்கள் ஊரில் நீங்கள் எந்த மாதிரியான விளையாட்டுகளை விளையாடுவீர்கள்? வித்தியாச மான விளையாட்டாக இருந்தால் எழுதி அனுப்புங்கள். கூடவே விளையாடும் போது ஏதாவது பாடல் பாடுவதுண்டா? அதனையும் குறிப்பிடுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
கிராமத்து விளையாட்டுகள்,
47-NP.,ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

அன்னையர்

மே முதல் தேதி, உலக தொழிலாளர் தினம். 1889-ல், பிரான்சில், மே மாதம் முதல் தேதியை தொழிலாளர் தினமாக அறிவித்து, விடுமுறை விடப் பட்டது. அதைத் தொடர்ந்து, உலக



மெங்கும் தொழிலாளர்களின் உரிமை களை நிலைநாட்டவும், தொழிலாளர் களது நலன்களைப் பாதுகாக்கவும் மே முதல் தேதியன்று பேரணிகளும், பொதுக் கூட்டங்களும், தெரு முனைக் கூட்டங்களும் நடத்தப்பட்டு வருகின் றன. சமீப காலமாக தாராளமயமாக்கல், தனியார் மயமாக்குதல் போன்ற வற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நாளா கவும் தொழிலாளர் தினம் கடை பிடிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் மட்டும் ஆண்டு தோறும் சுமார் ஆறாயிரம் பேர் ஆஸ்துமா நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டு மரணமடைகிறார்கள். அமெரிக்காவில் மட்டுமின்றி, உலக மெங்கும் ஆண்டுதோறும் ஆஸ்து மாவினால் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. 1998-ஆம் ஆண்டு, ஸ்பெயின் நாட்டின் பார்சிலோனா நகரில் அகில உலக அளவில் ஆஸ்துமா மாநாடு நடை பெற்றது. அதில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆஸ்துமா நோயாளி களும், மருத்துவர்களும், ஆஸ்துமாவுக்கு மருந்துகள் தயாரிக்கும் நிறுவனத்தி னரும் பெருமளவில் பங்கேற்று, ஆஸ்துமா நோய் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசி யம் என்று வலியுறுத்தினார் கள். அதனைத் தொடர்ந்து ஆண்டு தோறும் மே மாதம் முதல் செவ்வாய்க் கிழமையன்று உலக ஆஸ்துமா தினம் கொண்டாடப்படுகிறது.

கிரேக்க வரலாற்றில், கடவுள்களுக் கெல்லாம் அன்னையாக கருதப்பட்ட கடவுளைப் போற்றும் வண்ணம் அன்னையர் தினம் கொண்டாடப் பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. பிற் காலத்தில் அன்னை மேரியைப் போற்றும் வகையில் அன்னையர் தினம் கொண்டாடப்பட்டது. அமெரிக் காவைச் சேர்ந்த 'ஜூலியா வார்ட்



தினம்!

ஹூ' என்பவரது முயற்சியால் அமெரிக்காவில் அன்னையர் தினம் முதல் முதலாகக் கொண்டாடப்பட்டது. ஆரம்பத்தில் இது பெரிய அளவில் அங்கீகரிக்கப்படவில்லை என்றாலும், 1914-ல் அமெரிக்க ஜனாதிபதி உட்ரோ வில்சன், மே மாதம் இரண்டாம் ஞாயிற்றுக் கிழமையை அன்னையர் தினமாக அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் பன்னிரண்டாம் தேதி **உலக செவிலியர் தினம்** கொண்டாடப்படுகிறது. உலகமெங்கும் உள்ள மக்களுக்கு நர்ஸ் என்று குறிப்பிடப்படும் செவிலியர்கள் புரிந்து வரும் மகத்தான சேவையை அங்கீகரிக்கவே இந்தக் கொண்டாட்டம். 1953-ஆம் ஆண்டு, அமெரிக்க அரசின் சுகாதாரத்துறை, செவிலியர் தினக் கொண்டாட்டத்தை பரிந்துரைத்த போதிலும், அப்போதைய ஜனாதிபதி அதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஆனாலும் 1965-ஆம் ஆண்டு, அகில உலக நர்ஸ்கள் கவுன்சில், மே பன்னிரண்டாம் தேதியை அகில உலக செவிலியர் தினமாகக் கொண்டாடியது. மே மாதம் பன்னிரண்டாம் தேதி, கை விளக்கு ஏந்திய காரிகை என்று புகழப்படும் 'பிளாரன்ஸ் நைட்டிங்கேல்' அம்மையாரது பிறந்த நாளும் கூட. இத்தினத்தில், சிறப்பாகப் பணியாற்றிய செவிலியர்களுக்குப் பரிசுகளும், விருதுகளும் அளிக்கப்படுகின்றன.



உலக தொலைத்தொடர்பு தினம், ஆண்டுதோறும் மே பன்னிரண்டாம் தேதி கொண்டாடப்படுகிறது. 1865-ஆம் ஆண்டு இந்த நாளில்தான் அகில உலக அளவில், பல்வேறு உலக நாடுகளும் பங்கேற்ற அகில உலக தந்தி சங்கம் துவங்கப்பட்டது. உலக நாடுகளுக்கிடையிலான தந்தித் தகவல் பரிமாற்றம் சுமுகமாக நடைபெறுவதற்கு, இந்த அமைப்பு அவசியம் என்று கருதப்பட்டது. ஆனால், உலக தொலைத் தொடர்பு தினம் 1969-ஆம் ஆண்டிலிருந்துதான் கொண்டாடப்பட்டு வருகிறது.

மேலும் சில முக்கிய தினங்கள்:

நிலக்கரி சுரங்கத் தொழிலாளர்கள் தினம் (மே 4), உலக செஞ்சிலுவை சங்க தினம் (மே 8), தாலசீமியா நோய் விழிப்புணர்வு தினம் (மே 9), தேசிய தொழில் நுட்ப தினம் (மே 11), உலக ரத்த அழுத்த நோய் தினம் (மே 12), அகில உலக குடும்ப தினம் (மே 15), காமன் வெல்த் தினம் (மே 24), புகையிலை ஒழிப்பு தினம் (மே 31).

இதுவரை...

ஆனந்தி பட்டணத்துப் பெண். படிப்பு, பாட்டு கிளாஸ், கம்ப்யூட்டர் என்று தினம் தினம் ஒரே மாதிரி இருப்பதில் சலிப்பு ஏற்பட்டு விடுகிறது. அதனால் எல்லாம் மறந்து இயற்கைச் சூழலில் சிறிது நாட்கள் இருக்கும் ஆசை ஏற்படுகிறது. பெற்றோருக்குத் தெரியாமல் ரயிலில் கிளம்புகிறாள். காடும் அருவியும் சூழ்ந்த ஓர் இடத்தில் இறங்குகிறாள். அங்கே அச்சுஅசலாய் அவளைப் போலவே இருக்கும் தென்றலைப் பார்க்கிறாள். அவளுக்கோ பட்டணத்து வாழ்க்கை மீது ஆசை. இருவரும் இடம் மாறுவது என திட்டமிடுகிறார்கள். இனி...





7

"ஆனந்தி...!"

அவள் காதுக்கு அருகே குனிந்து, தென்றல் கத்திய பிறகுதான் ஆனந்திக்கு விழிப்பே வந்தது.

"ம்...இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கறேனே."

கண்களைக் கசக்கிவிட்டுக் கொண்டே மீண்டும் சுருண்டு படுத்தாள் ஆனந்தி.

தென்றல் விடவில்லை. அவள் தோள்பட்டையைப் பிடித்து உலுக்க ஆரம்பித்தாள்.

"வா, தோட்டத்துக்குப் போகலாம். இன்னிக்கு நாம பிரியணும். மறந்துட்டியா?"

பிரிய வேண்டும் என்று தென்றல் சொன்ன பிறகுதான் ஆனந்திக்குத் தூக்கம் கலைந்தது. சட்டென்று எழுந்துவிட்டாள்.

இருவரும் தோட்டத்துக்கு வந்தனர். தென்றல் கூறியபடியே கோழிகள் அங்கும் இங்கும் மேய ஆரம்பித்திருந்தன.

"ஏய் அங்கே பாரு நீல மூக்கு மைனா."

தென்றல் கைகாட்டிய இடத்தில், கொய்யா மரக்கிளையில் அமர்ந்திருந்தது அந்த மைனா. முதல்முறையாக ஒரு மைனாவை அதுவும் அத்தனை அருகில் வைத்துப் பார்த்ததில் ஆனந்திக்கு ஒரே குஷி! சென்னையில் அவர்கள் வசித்த இடத்தில் ஒரு மைனாவைப் பார்க்க முடியுமா? ஒரு குருவியை? புறாவை? ம்ஹூம்!

அந்த மைனாவின் மூக்கு நீலமாகவும் இருந்தது; நீளமாகவும் இருந்தது. அது



என் பெயர் தென்றல்!

நீல மூக்கு மைனாவா அல்லது, நீள மூக்கு மைனாவா?

ஏற்கெனவே பத்திரப்படுத்தி வைத்திருந்த வேப்பங்குச்சியை எடுத்து வந்து ஆனந்தியிடம் கொடுத்தாள்



தென்றல்.

"ம், பல் தேய்!"

ஆனந்தி அந்தக் குச்சியை வாங்கிக் கொண்டாள். திருப்பித் திருப்பிப் பார்த்தாள். மெலிதாகச் சிணுங்கினாள்.

"கசக்காதா?"

"பின்னே, கசக்கும்தான். அப்படியே மெதுவா கடி. அந்தச் சாறு பல்லுல பட்டா நல்லது. பற்கள் வலிமையாகும். பளபளன்னு மின்னும்."

சொன்னதோடு இல்லாமல் ஈ... என்று இளித்து தனது பளிச் பற்களை பெருமையாகக் காட்டினாள் தென்றல்.

முன் பற்களுக்கு இடையே குச்சியை வைத்து மெள்ள மெள்ள கடிக்க ஆரம்பித்தாள் ஆனந்தி. கசக்கத்தான் செய்தது. பத்து நிமிடங்கள்... குச்சியைத தூர எறிந்துவிட்டு வீட்டுக்குள் போனாள் ஆனந்தி.

தாத்தா முன்னரே எழுந்திருந்து காட்டுக்குப் போயிருந்தார். சரியாக பதினொரு மணிக்குள் அருகிலுள்ள ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விட வேண்டும்.

"ஏய், மறந்து போய் பாவாடை சொக்காயில் போயிடப் போறே. என்னோட ஸ்கூல் யூனிஃபார்ம் இருக்கு."

"அட ஆமாம் இல்லை, மறந்தே போயிட்டேன்" என்றபடி மூலையிலிருந்த துணி மூட்டையை எடுத்துப் பிரித்தாள் தென்றல்.

"இந்தா, இந்தச் சீட்டைக் கவனமா வச்சிக்க. சென்னை சென்ட்ரல் ஸ்டேஷன்ல இறங்கின பிறகு எந்த பஸ்ல போகணும், என்ன சொல்லி டிக்கெட் கேட்கணும், எங்கே இறங்கணும் எல்லாம் இதுல எழுதியிருக்கேன்."

தலையை ஆட்டிய தென்றல், ஒரே நிமிடத்தில் ஆனந்தியின் யூனிஃபார்முக்கு மாறினாள்.

"இப்ப எப்படி இருக்கேன்?"

"சூப்பரா இருக்கே! நான் சொல்லிக் கொடுத்த மாதிரியே பேசு. எங்க வீட்டுல யாருக்கும் சந்தேகம் வராது. நல்லா என்ஜாய் பண்ணு."

சாப்பிட்டு முடித்தபின், தாத்தா வரும் வரை இருவரும் பொறுமையுடன் காத்திருந்தனர். இரண்டு மணி நேரம் கழித்து தாத்தா திரும்பினார். கையில் இருந்த கூடையில் சில மாம் பழங்கள் மற்றும் முந்திரிப் பழங்கள்.

உள்ளே நுழைந்த தாத்தா,

யூனிஃபார்ம் அணிந்து தயாராக இருந்த தென்றலை ஆச்சரியத்துடன் பார்த்தார்.

"அட என்னம்மா, எங்கே கிளம்பறே?"

''நா... நான் கி...கிளம்பறேன், தாத்தா!''

"எங்கே?"

"வீட்டுக்குத்தான்! அம்மா தேடு வாங்க இல்லையா அதான்!"

தாத்தாவின் முகம் சட்டென்று வாடிவிட்டது.

"அடடா! அதுக்குள்ளவா கிளம்பறே?"

ஆனந்தியாக மாறியிருந்த தென்றல் தலையசைத்தாள்.

"சரிம்மா போயிட்டு வா. உன்னைப் பார்த்ததுல எனக்கு நிஜமாவே ரொம்ப சந்தோஷம். திரும்பவும் வந்தா, அவசியம் எங்களை வந்து பார்க்கணும்."

"சரி தாத்தா, நான் கிளம்பறேன்."

சொல்லும்போதே, தென்றலின் குரல் தழுதழுக்க ஆரம்பித்துவிட்டது.

"தாத்தா, நான் இவளைக் கொண்டு போய் விட்டுட்டு வரேன்'' என்றபடி தென்றலின் கையைப் பற்றிக் கொண்டாள் ஆனந்தி.

தாத்தா கையசைக்க, இருவரும் கிளம்பினார்கள்.



ரயில் நிலையத்தை அவர்கள் நெருங்க இருபத்தைந்து நிமிடங்களாயின. ஆனந்தி டிக்கெட் கவுண்டரில் சென்னைக்கு ஒரு டிக்கெட் வாங்கி, தென்றலின் கைப்பைக்குள் செருகினாள்.

"டிக்கெட் பத்திரம்."

டிரெய்ன் வரும்வரை இருவரும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். தென்றலுக்கு ஒரே பயம். அவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள் ஆனந்தி.

சிறிது நேரத்தில், டிரெய்ன் வந்து சேர்ந்தது. இருவரும் உள்ளே சென்றனர். ஜன்னல் ஓரம் ஓர் இடத்தில் தென்றலை அமர வைத்துவிட்டு, வெளியே வந்த ஆனந்தி, ஜன்னலுக்கு வெளியே நின்றபடி சத்தம் போட்டுப் பேசிக் கொண்டிருந்தாள்.

வண்டி நகரத் தொடங்கியது.

''பார்த்து தென்றல். பத்திரம். சென்னை வந்ததும் எல்லாரும் இறங்கிடுவாங்க. நீயும் மறக்காம இறங்கிடு. தூங்கிடாதே!"

"ம்...சரி!"

''பயப்படவே பயப்படாதே! திங்கள் கிழமையில இருந்து ஸ்கூல் திறந்துடுவாங்க. தைரியமா போ. உனக்கு வித்தியாசமான அனுபவமா இருக்கும்."

கையசைத்துக் கொண்டே வண்டியின் பின்னால் சிறிது நேரம் ஓடிய ஆனந்தி, ஒரு கட்டத்தில் மூச்சிறைக்க அப்படியே நின்றுவிட்டாள். ஒரு புள்ளியாக மாறி, மறைந்து போனது வண்டி.


வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் ஆனந்தி.

(தொடரும்)

பேசாத
படக்கதை

யார் குடித்தது?

கருத்து, படம் :
தர்மா



கோகுலம் வெள்ளி விழா +
குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா
நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007

மொத்தப் பரிசுத் தொகை ரூ.2000/-

முதல் பரிசு ரூ. 1000/-
இரண்டாம் பரிசு ரூ. 500/-
மூன்றாம் பரிசு ரூ. 500/-
(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது.

கோகுலத்துக்கு இது வெள்ளி விழா வருடம். ஆகவே பரிசுத் தொகையும் இரட்டிப்பாகிறது. உற்சாகத்துடன் கலந்து கொண்டு சிறப்பியுங்கள்!



நிபந்தனைகள்:

- இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாக படிக்கும் வகுப்பு, பள்ளி முகவரி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.
- கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனையாக இருத்தல் முக்கியம். அதற்கான உறுதிமொழி கடிதத்தை கதையுடன் இணைக்க வேண்டும்.
- பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திரும்பப் பெற, போதிய தபால் தலைகளை இணைக்கவும். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல் முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்.
- போட்டி முடிவு வெளியாகும் வரை கடித போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.
- கதைகள் வந்து சேர வேண்டிய முடிவு தேதி: **30.6.2007**

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
அழ.வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி - 2007
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032


* வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒரு சிறந்த வழக்கறிஞர். அவரது அப்பாவும் ஒரு வழக்கறிஞர்தான். வ.உ. சிதம்பரம் பிள்ளை பலமுறை ஏழைகளுக்காக எந்தக் கட்டணமும் இல்லாமல் நீதிமன்றத்தில் வாதாடியிருக்கிறார். சில சமயம் இதற்காக அவர் தன் அப்பாவுக்கு எதிராகக் கூட வாதாடியிருக்கிறார்!

* தூத்துக்குடியிலிருந்து கொழும்புவுக்குச் செல்லும் 'சுதேசி நீராவிக் கப்பல் போக்குவரத்துக் கம்பெனி' என்ற நிறுவனத்தை துவக்கினார். இதற்காக இரண்டு கப்பல்களை அவர் வாங்கினார். அவற்றின் பெயர் எஸ்.எஸ்.கேபியா, எஸ்.எஸ்.லவோயி. இந்தக் கப்பல்களை வாங்க பாலகங்காதரதிலகர் மற்றும் அரவிந்தகோஷ் உதவி செய்தனர்.

* சிதம்பரனார் இப்படிக் கப்பல் நிறுவனம் நடத்தியது பிரிட்டிஷ்காரர்களுக்குப் பிடிக்கவில்லை. அவரது வியாபாரத்தைப் படுக்க வைப்பதற்காக தூத்துக்குடியிலிருந்து கொழும்பு செல்லும் கட்டணத்தை வெறும் ஒரு ரூபாயாகக் (16 அணா) குறைத்தனர். உடனே சிதம்பரம் பிள்ளை தமது கப்பல் கட்டணத்தை எட்டணாவாக குறைத்தார். ஆங்கிலேயக் கம்பெனியோ தனது கப்பலில் பயணம் செய்ய கட்டணமே தேவையில்லை என்றும், ஒவ்வொரு பயணிக்கும் குடை ஒன்று இலவசமாகத் தரப்படும் என்றும் அறிவித்தது. இதைத் தொடர்ந்து சில நாட்களில் சிதம்பரம் பிள்ளையின் கப்பல்களில் பயணம் செய்வோர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்தது. 1909-ல் கிட்டத்தட்ட திவாலாகும் நிலைக்கு அவரது நிறுவனம் நொடித்துப் போனது.

* காங்கிரஸின் முக்கிய உறுப்பினராக விளங்கினார் சிதம்பரம் பிள்ளை. ஒருமுறை சேலம் மாவட்ட காங்கிரஸ் சபைத் தலைவராக விளங்கியிருக்கிறார்.

எட்டணா



* வ.உ.சி. இழுத்த செக்கு



• சிதம்பரம் பிள்ளை, சுதந்திரப் போராட்டத்தில் தமது தலைவராக ஏற்றுக் கொண்டது பாலகங்காதர திலகரையே! அப்போது மகாத்மா காந்தி பரவலான அளவில் அரசியலில் பங்குபெறத் தொடங்கவில்லை. தவிர பின்னாளிலும் காந்திஜியின் மிதவாதத்தைவிட, திலகரின் தீவிர நடவடிக்கைகள்தான் பிரிட்டிஷாரை நாட்டைவிட்டு வெளியேற்றும் என்று சிதம்பரம் பிள்ளை கருதினார்.

• விவேகானந்தரின் சீடரான ராமகிருஷ்ணானந்தாவை உதாரணமாகக் கொண்டவர் சிதம்பரம் பிள்ளை.

சிதம்பரம் பிள்ளை சிறையிலிருந்து திரும்பியபோது மிக ஏழையாக இருந்தார். தன்னிடமிருந்த சட்ட நூல்களைக் கூட அவர் விற்று வாழ்க்கை நடத்த வேண்டியிருந்தது.



பயணம்!

• திருநெல்வேலியில் ஆலை ஊழியர்களுக்கு ஆதரவாக சிதம்பரம் பிள்ளை செயல்பட, ஆங்கிலேய அரசு மிகவும் கோபம் கொண்டது. கொடிய குற்றங்களைச் செய்ததாக அவர்மீது வழக்கு தொடுத்தது. அதில் சிதம்பரம் பிள்ளைக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சிறையில் அவர் ஓர் அரசியல் கைதியாக நடத்தப்படவில்லை. செக்கிழுப்பது வரை பல கடும் செயல்களைச் செய்ய வைத்தார்கள்.

• அவரது வழக்கறிஞர் பதவி பறிக்கப்பட்டது. ஒரு காலத்தில் பெரும் பணக்காரராக விளங்கிய

• சிதம்பரனார் 18.11.1936-அன்று தூத்துக்குடி காங்கிரஸ் அலுவலகத்தில் உயிர் நீத்தார்.

• சிதம்பரம் பிள்ளை சிறைக்குச் செல்லும்போது ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு கோஷமிட்டனர். ஆனால் அவர் சிறையிலிருந்து திரும்பியபோது அவரை வரவேற்க யாருமே இல்லையாம்! நாம் எல்லோருமே சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் மதிப்பையும், அவர்களின் தியாகத் தால் கிடைத்த நம் தேச சுதந்திரத்தின் மதிப்பையும் எப்போதும் மனத்தில் கொள்ள வேண்டும்.



"பேப்பரை ஏண்டா தண்ணியில நனைச்சுப் படிக்கறே?"


"அதுல சூடான செய்திகள் இருக்கறதாச் சொன்னாங்க, அதான்."

- எம்.சரவணன்



"முதுகுல பல்லி விழுந்தால் காலண்டர்ல குழப்பம்னு போட்டிருக்கே!"

"நம்ம முதுகுல பல்லி விழுந்தா காலண்டர்ல ஏண்டா குழப்பம் வரணும்?"



"எங்க வீட்ல என்னை மடையன், முட்டாள்னு திட்டுவாங்க. உங்க வீட்ல?"

"எங்க வீட்ல உன்னைப் பத்தி அவ்வளவா தெரியாது."

- ஆ. விஜயலக்ஷ்மி



"அந்த அணிலை யாரோ ஏமாத்திட்டாங்கன்னு நினைக்கறேன்."

"எப்படிச் சொல்றே?"

"முதுகுல நாமம் போட்டிருக்கே!"





''பல் ஆடுது டாக்டர்!''

''ஆட்டோட பல்ல நீங்க ஏன் வெச்சிருக்கீங்க?''

- அஜீரா



குருவி பணம் சேர்க்குமா?

"சார்! எந்தக் குருவியாவது பணம் சேர்க்குமா?"

"சேர்க்காது. ஏன் கேட்கிறே?"

"பின்னே ஏன் சார் குருவி சேர்க்கற மாதிரி பணம் சேர்க்கணும்னு சொல்றீங்க?"

- ஜி.சிந்தியா





''வீட்டுக்கோழியின் ஆயுட் காலம் எவ்வளவு?''

''விருந்தாளி வர்றவரைக் கும் சார்.''

- எம்.சரவணன்





கதை எழுதி அதன் மூலம் படிப்பவர் உள்ளங்களைக் கவர்வது சாதாரண விஷயமல்ல. அது ஒரு திறமை! அதிலும் குழந்தைகளின் உள்ளங்களைக் கவர்வதென்றால் சும்மாவா? கொஞ்சம் 'போர்' அடித்தாலும் சட்டென படிப்பதை நிறுத்தி, விளையாடப் போய் விடுவார்கள். எந்த இடத்திலும் சுவாரஸ்யம் குறையாமல் கொண்டு செல்ல வேண்டும். அப்படி தங்கள் எழுத்துகளால் உங்களைப் போன்ற சிறுவர் சிறுமிகளைக் கட்டிப் போட்ட எழுத்தாளர்களைப் பற்றி இந்தப் பகுதியில் மாதா மாதம் பார்ப்போமா?

சிவப்பும் மஞ்சளும் கலந்த காரில் 'பீம்! பீம்!' என்று 'ஹார்ன்' அடித்த வாறு வருவார் நம்ம ஹீரோ. பின்னணியில் 'நா...நா... நாடீ...மேக் வே ஃபார் நாடீ' என்ற பாடல் ஒலிக்கும். தலையில் ஒரு குல்லா, அதன் நுனியில் ஒரு மணியும் இருக்கும். நடக்கும் போதும், தலையை அசைக்கும் போதும் மணி அப்படியும் இப்படியுமாக குலுங்கும். அதை நிறுத்த கையால் முகத்தைப் பிடித்துக் கொள்வது மிக அழகாக இருக்கும். 'போகோ'வில் பார்த்திருப்பீங்களே..?

'நாடீ' வசிக்கும் 'டாய்லேண்டி'ல் அத்தனை கேரக்டர்களுமே உள்ளத்தை கொள்ளை கொள்ளும். இந்த 'நாடீ'யின் பிரம்மா ஒரு பிரிட்டிஷ் பெண்மணி. பெயர் 'எனிட் மேரி ப்ளைடன்'.

லண்டனில் பக்கிங்ஹாம் நகரில் பிறந்தவர் *(1897 - 1968)*, 'எனிட் மேரி ப்ளைடன்' (Enid Mary Blyton). செயிண்ட் கிரிஸ்டோஃபர் பள்ளி விடுதியில் தங்கிப் படித்த ப்ளைடன் சிறு வயதிலேயே குடும்பப் பொறுப்பைச் சுமக்கும் சூழலுக்குத் தள்ளப்பட்டார். ஆம்! அவரது பதிமூன்றாம் வயதில், தந்தை எங்கேயோ சொல்லிக் கொள்ளாமல் சென்று விடவே, இரண்டு தம்பிகளை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு, குருவித் தலையில் பனங்காயாக இவர் தலையில் ஏற்றப்பட்டது.

ஆசிரியர் பயிற்சி பெற்று ஒரு வருடம் ஆசிரியராகப் பணியாற்றினார். பின்னர் குழந்தைகளைப் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டார். குழந்தைகளுடன் ஏற்பட்ட இந்தத்







• ப்ளைடன்

நாடியின் பிரம்மா!

தொடர்புதான் அவரை சிறந்த குழந்தை எழுத்தாளராக்கி இருக்க வேண்டும்.

தன் மன அழுத்தத்தைக் குறைத்துக் கொள்ள ஓய்வு நேரங்களில் எழுதத் தொடங்கினார். இவரது பதினான்காவது வயதில் "சைல்ட் விஸ்பர்ஸ்" என்கிற முதல் கவிதைப் புத்தகம் வெளியிடப்பட்டது.

பிறகு குழந்தைகள் ரசிக்கும் வகையில் வித்தியாசமான, வீர சாகச கதாபாத்திரங்களை வடிவமைக்கத் தொடங்கினார். அக் கதாபாத்திரங்களைக் கொண்டு பல கதைகள், நாடகங்கள், கவிதை தொகுப்புக்களை எழுதிக் குவித்தார்.

'லிட்டில் நாடி சீரீஸ்' (Little Noddy



Series), 'ஃபேமஸ் ஃபைவ்' (Famous Five) கதைகள், 'சீக்ரெட் செவன்'(Secret Seven) ஆகிய கதைப் புத்தகங்கள் இவரை மேலும் பிரபலமடையச் செய்தன. நாற்பது வருடங்களில் சுமார் எண்ணூறு புத்தகங்களுக்கு மேல் எழுதி சாதனை படைத்தார். ●



சூப்பர் கையெழுத்து!



விடுகதைகள்

- வெள்ளை நிறத்தழகி பூனை – எங்கள் வீட்டில் வளர்கிறாள்;
- பிள்ளைகளைப் பெற்றதும் பூனை – அவை பேரில் மகிழ்ந்து மகிழ்
- சாம்பல் நிறமணி இடு – கருத் சேர்ந்து நிறமணி இடு.
- பசும் நிறமணி இடு – வெள்ளைப் பாகம் நிறமணி இடு.

வி. ஹரி நிஷாந்தி,
நான்காம் வகுப்பு, வேல்ஸ்
வித்தியாச்சரம், சென்னை



இந்த அழகான சம்பவம் என் சிறு வாழ்வில் நடந்தது, அதில் ஒரு பாடமும் கற்றுக் கொண்டேன். அரையாண்டு விடுமுறையை அடுத்து பள்ளியில் தேர்வு மதிப்பெண்களை ஆசிரியைகள் தந்தனர். நான் 90 விழுக்காடுகள் பெற்று வகுப்பில் முதல் மாணவனாகத் தேறினேன். எங்கள் தமிழ் ஆசிரியை அத்தனை சகமாணவர்களையும் விசாரித்து அழைப்பித்தினார். நான் அவரிடம் பெற்ற விழுக்காடுகளை பற்றிக் கூறி, வகுப்பில் முதல் மாணவன் என்பதையும் கூறினேன்.

ச. ரவிசங்கர்,
9-ஆம் வகுப்பு,
ஸ்ரீராமகிருஷ்ணா
மெட்ரிக்
மே.நி.பள்ளி,
கோவை



திருவள்ளுவர்.

'யாம் அறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை' என்று பாரதியார் போற்றியிருக்கிறார். தெய்வப் புலவர், வள்ளுவர், செந்நாப் புலவர் என்ற பெயர்களும் பெருநாவலர், ஆகியப் பெயர்களும் திருவள்ளுவர் தமிழ்ச் சங்கத்தில் சிறந்து விளங்கிய ஆசிரியரை "திருவள்ளுவர் ஆண்டு" என்றும் கணக்கிடப்படுகிறது. தமிழகத்தில் வழக்கத்தில் கொண்டாடப்படுகின்றது. 1330 அதிகாரத்தில் பதிவு செய்து 1330 குறள்கள் எழுதியுள்ளார்.

— சி. ஸ்ரீவத்ஸ்ஸ்ரீ

சி.ஸ்ரீவத்ஸ்ஸ்ரீ,
ஏழாம் வகுப்பு,
ஸ்ரீ நடேசன் வித்
யாசாலா மெட்ரிக்
மே.நி.பள்ளி,
சென்னை

பெரிய வேலைக்காரன்!

அத்திப்பட்டி என்ற ஊரில் ராமு என்னும் பணக்காரன் இருந்தான். அவன் தனது வேலையாட்களிடம் கடுமையாக வேலை வாங்குவான். அவர்கள் எவ்வளவு வேகமாகச் செய்தாலும், திருப்தியடையாமல் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பான்.

அதிலும், சம்பளம் கொடுக்கும் நாளில், "இதுக்கு மட்டும் சுறு சுறுப்பா வந்து நில்லுங்க. வேலைய மட்டும் வேகமா செய்யாதீங்க'' என்று ஏசுவான். இதனால் அவனிடம் வேலைக்குச் சேரும் ஆட்கள் சீக்கிரமே வேறு இடங்களைத் தேடிப் போய் விடுவார்கள்.



ஒருமுறை முனிவர் ஒருவர் அந்த ஊருக்கு வந்திருந்தார். அவரிடம் சென்ற ராமு "சாமி! எனக்கு ஒரு வேலைக்காரன் வேண்டும். எவ்வளவு கடினமான வேலையைக் கொடுத்தாலும் வேகமாகச் செய்து விட வேண்டும். நல்ல பலசாலியாக இருக்க வேண்டும்'' என்றான்.

ராமுவைப் பற்றி முனிவர் முன்பே கேள்விப்பட்டிருந்தார். "சரி, நான் ஒரு வேலைக்காரனை அனுப்புகிறேன்.

அவனுக்குச் சம்பளம் கூட கொடுக்க வேண்டியதில்லை. ஆனால் ஓர் எச்சரிக்கை. அவனுக்கு எப்போதும் வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஏனென்றால் அவனால் சிறிது நேரம் கூட சும்மா இருக்க முடியாது. வேலை கொடுக்காவிட்டால் உன்னையே அடித்து விடுவான்" என்றார்.

"ஒரு நிமிடம் கூட சும்மா இல்லாமல் வேலை செய்பவனை யாருக்குத்தான் பிடிக்காது? தாராளமாக அனுப்புங்கள்" என்றான் ராமு.

முனிவர் ஒரு மந்திரத்தைச் சொல்ல, அங்கே பத்தடி உயரத்தில் ஆஜானுபாகுவான உடலுடன் ஒரு பூதம் தோன்றியது. "பூபா, இன்று முதல் நீ இவரது வேலைக்காரன். இவருடன் செல்" என்று கூறினார்.

பூபா ராமுவுடன் சென்றான். வீட்டை அடைந்ததும் "ஏய், பூபா! தோட்டத்தில் ஆயிரம் தேங்காய்கள் உள்ளன. அவற்றையெல்லாம் உரித்து வை" என்று கட்டளையிட்டான்.

பூபா சென்றதும், 'எப்படியும் வேலை முடிவதற்கு சாயந்திரமாகும். அதுவரை நாம் தூங்குவோம்' என நினைத்தவாறு ராமு படுத்தான். கண்கள் சொக்கிய நேரம்...

''முதலாளி!'' என்று காதருகே 'கணீர்' குரல் வந்தது. திடுக்கிட்டுக் கண்களைத் திறந்தான். அருகே பூபா நின்றிருந்தான்.

"என்ன?" என்று கேட்டான் ராமு

''தேங்காய்களை உரித்து விட்டேன். அடுத்த வேலையைச் சொல்லுங்கள்" என்றான் பூபா.

"என்ன அதற்குள் உரித்து விட்டாயா? சரி, தோட்டத்தைச் சுத்தம் செய்து, கிணற்றிலிருந்து நீர் இரைத்து மரங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சு'' என்றான்.

அந்த வேலைகளையும் முடித்து விட்டு வந்த பூபா, "அடுத்த வேலையைச் சொல்லுங்கள். இப்படி சின்னச் சின்ன வேலையாக இல்லாமல் பெரிய வேலையாகச் சொல்லுங்கள்''



என்று அதட்டினான்.

எத்தனையோ வேலைகளைச் சொல்லியும், பூபா அவற்றை மிக வேகமாக முடித்து விட்டான். 'இனி சொல்வதற்கு வேலையே இல்லையே. என்ன செய்வது?' என்று புரியாமல் தவித்தான் ராமு.

"சீக்கிரம் வேலையைச் சொல். இல்லையென்றால் உன்னைத் தூக்கிப் போட்டு மிதித்து விடுவேன்" என்றபடி அருகே வர, ராமு பயந்து வெளியே ஓடி வந்தான்.

அப்போது பக்கத்து வீட்டுக்காரர் எதிரே வந்தார். "என்ன ராமு, ஏன் இப்படி ஓடி வர்றே?" என்று கேட்டார்.

ராமு நடந்ததைச் சொல்லி "எப்படியாவது என்னைக் காப்பாற்று" என்றான்.

தெருவில் ஒரு நாய் நின்றிருந்தது. அதைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரர் ராமுவின் காதில் கிசுகிசுத்தார். அப்போது பூபா அங்கே வந்து சேர்ந்தான்.

"ஏய் பூபா! இந்த நாயின் வாலை நிமிர்த்து" என்றான் ராமு.

பூபா நாயைத் தூக்கி அதன் வாலை பலமுறை நீவி விட்டான். ஆனால் வாலை நேராக்க முடியவில்லை. அதற்குள் ராமு வேகமாக முனிவரிடம் சென்றான்.

"சாமி! நீங்கள் அனுப்பிய வேலைக்காரனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுங்கள். எனக்குச் சாதாரண வேலைக்காரர்களே போதும்" என்றான்.

"ராமு வேலைக்காரர்களும் மனிதர்கள்தான். அவர்களை இயந்திரம் போல் விரட்டாமல் அன்புடன் வேலை வாங்கு" என்றார் முனிவர்.

"சரி சாமி" என்ற ராமு வீடு திரும்பினான். அன்று முதல் அவன் தன் வேலையாட்களிடம் அன்பாக நடந்து கொண்டான்.

1000/- ரூபாய்



பரிசுப் போட்டி முடிவு

மார்ச் மாத கோகுலத்தில் அறிவித்த பரிசுப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பெரும்பாலானோர் சரியான விடையை எழுதியிருந்தீர்கள். ஆகவே குலுக்கல் மூலம் ஐந்து பேரைத் தேர்வு செய்து, பரிசுத் தொகை ரூ.1000/- பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள்:

1. கண்ணகி சிலை
2. சுதந்திரதேவி சிலை
3. ஜவாஹர்லால் நேரு சிலை
4. மகாத்மா காந்தி சிலை
5. உழைப்பாளர் சிலை

ரூ.200/- வீதம் பரிசு பெறுவோர்:

1. என்.ஆர்.ரஞ்சனி, த/பெ.ரவிசங்கர், சென்னை - 44,
2. சீ.வஹீதா, ச.கு.வேலாயுதம் மே.நி.பள்ளி, குறிஞ்சிப்பாடி
3. எம்.லோகேஷ்மதன், த/பெ.எஸ்.மகேஷ்பாபு, பூம்புகார்
4. எஸ்.லக்ஷ்மிகாந்த், த/பெ.ஆர்.சத்தியநாராயணன், விழுப்புரம்
5. ஏ.பிரியங்கா, அரசினர் உயர்நிலைப்பள்ளி, கோவை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்; கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி!

டாக்டர் கு. கணேசன்

அன்புள்ள ரமணா,

டாக்டர் மாமா எழுதுகிறேன். முழு ஆண்டுத்தேர்வைத் திருப்தியாக எழுதியுள்ளதாகக் கடிதம் அனுப்பியிருந்தாய். மிகவும் மகிழ்ந்தேன். அதே நேரத்தில் இந்தக் கோடை விடுமுறையில் வெளியூர் எங்கும் செல்வதற்கு வசதிப்படவில்லை என்று வருத்தப்பட்டிருந்தாய்.

இதில் வருத்தப்பட ஒன்றுமில்லை ரமணா! கொடைக்கானல், ஊட்டி என்று கோடை வாசஸ்தலங்களுக்குச் சென்று வந்தால் தான் குளுமையை அனுபவிக்க முடியும் என்று எண்ண வேண்டாம். கோடைக் குளுமையை உன் வீட்டிலேயே அனுபவிக்கலாம். எப்படி?

வெயிலின் வெக்கை உடலுக்குள் புகும்போது சாதாரண வியர்க்குருவில் தொடங்கி, ஆபத்தான வெப்ப மயக்கம் வரை பல தொல்லைகள் வரக்கூடும் என்பதை நீ மறக்காதே. அவற்றை முதலில் நீ தவிர்க்க வேண்டும். அதற்கு உன் உடைகளில் கவனம் செலுத்த வேண்டும். கோடைக்கு உகந்தது பருத்தி ஆடைகளே! அவற்றில்கூட இறுக்கமான ஆடைகளைத் தவிர்த்து தளர்வான ஆடைகளை அணிய வேண்டியது முக்கியம். உடல் முழுவதும் மூடுகின்ற ஆடைகளை அணிய வேண்டியது அதைவிட முக்கியம். மிகுந்த அடர்த்தியான வண்ண ஆடைகளை அணிய வேண்டாம். வெள்ளை நிற ஆடைகள் அல்லது வண்ணம் குறைந்த ஆடைகளை அணிவது நல்லது. ஆடையின் வெளிப்பக்கத்தில் வெள்ளை நிறமும் உள்பக்கத்தில் கறுப்பு நிறமும் இருந்தால் இன்னும் நல்லது.

கோடையில் அதிகமாகத் தண்ணீர் குடி. சாதாரணமாக தினமும் 2 லிட்டர் தண்ணீர் குடிப்பது வழக்கம். கோடையில் மூன்றிலிருந்து நான்கு லிட்டர் வரை குடிக்க வேண்டும். இதற்குத் திரவ ஆகாரங்களை அதிகப்படுத்திக் கொள்வதுதான் சிறந்த வழி. வெயில் காலத்தில் காபி மற்றும் தேநீர் குடிப்பதைக் குறைத்துக் கொள். வாயு நிரப்பப்பட்ட செயற்கை மென்பானங்கள் (கூல்டிரிங்க்ஸ்) குடிக்கக் கூடாது. பதிலாக, இளநீர், மோர், பதநீர், லஸ்ஸி, சாத்துக்குடி, ஆரஞ்சு, திராட்சை, மாதுளம் போன்ற இயற்கை பழங்களின் பானங்களைக் குடிப்பதை அதிகப்படுத்திக்கொள்.

எலுமிச்சைச் சாற்றில் உப்பு அல்லது சர்க்கரை சேர்த்து சாப்பிடுவது நல்லது. தர்ப்பூசணி, வெள்ளரி, கொய்யா, பப்பாளி, பலாப்பழம், அன்னாசி போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களையும் அடிக்கடிச் சாப்பிடு. இரவு உணவில் 2 வாழைப்பழங்களை அவசியம் சேர்த்துக்





கொள். வாழைப்பழத்தில் பொட்டாசியம் சத்து நிறைய உள்ளது. இது நீரிழப்பை ஈடுகட்ட உதவும்.

அப்படி இல்லையெனில் ஒரு லிட்டர் சுத்தமான குடிநீரில் மூன்றரைத் தேக்கரண்டி சர்க்கரை, இரண்டரைத் தேக்கரண்டி சமையல் உப்பு, ஒன்றரைத் தேக்கரண்டி பொட்டாசியம் உப்பு போட்டுக் கலக்கு. ஒரு மணி



கோடையிலும் குளு! குளு!

நேரத்துக்கு ஒரு முறை 100 மி.லி. அளவில் இதைக் குடி. இதனால் உடலில் வெப்பம் உயர்வது தவிர்க்கப்படும்; குளிர்ச்சி கிடைக்கும்.

கோடையில் இரண்டு மணி நேரத்துக்கு மேல் தொடர்ந்து வெயிலில் விளையாடுவதைத் தவிர்க்க வேண்டும். வெளியே செல்கையில் குடையோடு செல்ல வேண்டும்.

வெயிலில் அதிக நேரம் சாலையில் பயணிக்க வேண்டியிருந்தால் கண்களுக்குச் சூரியக் கண்ணாடியை (Sun glass) அணிந்துகொள்.

காரம் மற்றும் மசாலா நிறைந்த உணவுகள், எண்ணெய்ப் பலகாரங்கள், பேக்கரிப் பண்டங்கள் ஆகியவை தண்ணீர்த் தாகத்தை அதிகப்படுத்தும் என்பதால் இவ்வகை உணவுகளைக்





குறைத்துக் கொள். பார்லி உணவு, மாம்பழம், கரும்புச்சாறு மற்றும் அசைவ உணவுகளையும் தவிர்த்தல் நலம்.

இட்லி, இடியாப்பம், தயிர்சாதம், மோர்சாதம், கம்பங்கூழ், வெங்காயப் பச்சடி, வெள்ளரி சாலட், பொன்னாங்கண்ணிக் கீரை, பீட்ரூட், காரட், முள்ளங்கி, பாகல், தக்காளி ஆகியவை சிறந்த கோடை உணவுகள்.



வெயில் காலத்தில் தினமும் இரு வேளை குளித்தால் வியர்க்குரு வராது. அக்னி நட்சத்திர வெயிலின்போது கண்களில் எரிச்சல் ஏற்படும். அப்போது ஈரத்துணியைக் கண்களின் மீது போட்டுச் சற்றுநேரம் ஓய்வு எடுப்பது நல்லது.

உன் படுக்கை அறையை மாலையிலேயே ஈரத்துணியால் நன்கு துடைத்து விடு. இரவில் அறை குளிர்ச்சியாக இருக்கும். இப்படி பல விதங்களில் நீ கோடையைக் குளுமையாக்கிக் கொண்டு விடுமுறையை நன்கு அனுபவி ரமணா! வாழ்த்துகள்!


உன் அன்பு மாமா,

டாக்டர் கு.கணேசன்

அ. அனீஸ் ஃபாத்திமா



தெரியுமா?



• ராஜேந்திர பிரசாத்




• சங்கர் தயாள் சர்மா



• அப்துல் கலாம்



• ஆர்.வெங்கட்ராமன்



• கே.ஆர்.நாராயணன்


அப்துல்கலாமுக்குப் பிறகு அடுத்த 'முதல் குடிமகன்' யார்?

இந்தக் கேள்வி நாடு முழுவதும் உலாவிக் கொண்டிருக்கிறது. வருவது யாராக இருந்தாலும் மலர்ச் செண்டு கொடுத்து வரவேற்போம். அவர்களால் இந்தியாவின் பெருமை மேலும் உயரட்டும். இதுவரை நமது நாட்டின் குடியரசுத் தலைவர்களாக இருந்தவர்கள் பட்டியல்:

- ⊙ டாக்டர் ராஜேந்திர பிரசாத் - 1950 - 1962
- ⊙ டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் - 1962 - 1967
- ⊙ டாக்டர் ஜாகிர் ஹுசைன் - 1967 - 1969
- ⊙ டாக்டர் வி.வி.கிரி - 1969 - 1974
- ⊙ கியானி ஜெயில் சிங் - 1982 - 1987
- ⊙ ஆர்.வெங்கட்ராமன் - 1987 - 1992
- ⊙ டாக்டர் சங்கர் தயாள் சர்மா - 1992 - 1997
- ⊙ கே.ஆர்.நாராயணன் - 1997 - 2002
- ⊙ டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் - 2002 - 2007




• எஸ்.ராதாகிருஷ்ணன்



• வி.வி.கிரி



• ஜெயில் சிங்



• ஜாகிர் ஹுசைன்




குட்டீஸ் கோகுலம்
உங்கள் சின்னஞ்சிறு கைகள், பளபள கண்கள், சுட்டியான மூளை அனைத்துக்கும் சவால்!
சொப்னா போன சுற்றுலா!
கதை: வாண்டுதாசன்
படம் : பிள்ளை
கோகுலம் காமிக்ஸ்

வண்ணம் தீட்டுங்கள்!

இந்தப் படத்தை உங்கள் கைவண்ணத்தால் அழகுபடுத்துங்க!





இங்குள்ள வட்டத்தில் நவரத்தினங்களின் பெயர்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்க!

விடை: 47-ஆம் பக்கம்.





கருத்து: ஜி.புஷ்பநாதன்

கண்டுபிடி! கண்டுபிடி!





எத்தனை

இரண்டு
படங்களுக்கிடையே
எத்தனை வித்தியாசங்கள்
உள்ளன?

விடைகள்: ➡





வித்தியாசங்கள்?

விடைகள் : 1. கேரட் 2. மேகம் 3. வேலி 4. வீட்டுக்கூரை 5. முயலின் கை





நீங்களும் வரையலாம்!

இங்குள்ளவாறு படிப்படியாக முயற்சித்து
நேரு மாமாவை வரையுங்கள், பார்க்கலாம்!



கொ	க்	கு	தூ	தை	ந்	ஆ
ணா	மை	ரு	க்	க	யு	கு
பு	றா	வி	க	ம்	க	கா
ம	ளி	கி	ணா	கா	ம	தி
ணி	ழி	ப	ங்	டை	யி	த்
ப்	கோ	ரு	கு	யி	ல்	கொ
பு	ன்	ந்	ரு	ஈ	மு	ன்
றா	வா	து	வி	ழி	கோ	மீ




இங்குள்ள கட்டத்தில் இடமிருந்து வலம், மேலிருந்து கீழ், வலமிருந்து இடம், கீழிருந்து மேல் சில பறவைகளின் பெயர்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

விடை: 47-ஆம் பக்கம்



பெயர்களைக் கண்டுபிடி!






சிங்கம்




மான்

வெள்ளை நிற

வெள்


பாவம்! அவங்க வேலை அப்படி.
என்ன பொல்லாத வேலை!
இவங்க நேரத்தோடு போய் ஆபீஸைக் கவனிக்கலைன்னா, வேலை சரியா நடக்காதே...
அப்போ, நான் என்ன ஆனாலும் பரவாயில்லையா?


கங்காரு





கரடி


மயில்


அப்படி இல்லை. சரி விடு! உனக்கு டூர்தானே போகணும்? நான் கூட்டிட்டுப் போறேன்.
நீயா? ஹா...ஹா...ஹா...
ஏன் சொப்னா சிரிக்கிறே?
நீ எங்கே கூட்டிட்டுப் போவே?

புள்ளிகளை இணையுங்கள்!

ஒன்று முதல்
பத்தொன்பது
வரையிலான புள்ளிகளை
இணைத்து
உருவத்தைக்
கண்டுபிடியுங்கள்!







யார் இவர்கள்?

இங்குள்ளோரின் தோற்றத்தை வைத்து இவர்கள் எந்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள்.

விடை: 47-ஆம் பக்கம்








இந்தப் படத்திலிருந்து மூன்று துண்டுகள் தனியே உள்ளன. அவற்றை வெட்டியெடுத்து சரியான இடத்தில் ஒட்டுங்கள்!






இந்தப் படத்தில் உள்ள தவறுகள் தெரிகின்றனவா? விடை: பக்கம் 47-ல்




ஐஸ்கிரீம் யாருக்கு?

நான்கு பேரில் யாருக்கு ஐஸ்கிரீம் கிடைக்கும்? வழி தேடிப் பாருங்கள்!





பெயர்களைக் கண்டுபிடி:





விடைகள் பக்கம்

கண்டுபிடி! கண்டுபிடி!

1. கோமேதகம் 2. மாணிக்கம்
3. புஷ்பராகம் 4. மரகதம் 5. பவழம்
6. நீலம் 7. வைடூரியம் 8. முத்து
9. வைரம்

யார் இவர்கள்?

1. எகிப்தியர் 2. ஜப்பானியர்
3. ஆப்ரிக்கர்

தவறுகள் என்ன?

1. சிக்னல் இரண்டும் பச்சை நிறமாக உள்ளன.
2. STOP வார்த்தை தலைகீழாக உள்ளது.
3. டாடா சுமோவின் சக்கரம் சதுரமாக உள்ளது.
4. போலீஸ்காரர் கால்களில் செருப்பு அணிந்துள்ளார்.
5. நிறுத்தக் கோடுகள் கோணலாக வரையப்பட்டுள்ளன.





சவால்!

இந்த எலுமிச்சை மரத்தில் எத்தனை காய்கள், பழங்கள் உள்ளனவென்று எண்ணிப் பாருங்கள்!



பரிசு ரூ.1000/-



கோகுலம் காமிக்ஸ்ல வந்த 'சொப்னா போன சுற்றுலா' கதையைப் படிச்சுட்டீங்களா? இந்த மாதப் போட்டி, அந்தக் கதையோடு தொடர்புடையதா வெச்சுப்போமா?

சொப்னாவோட அப்பா - அம்மா மட்டுமில்லீங்க; எல்லோருடைய அப்பா, அம்மாவுக்கும் குழந்தைகள் மேல அக்கறை இருக்கு. அதைப் புரிஞ்சுக்காம சில சமயம் பெற்றவங்க மீது கோபப்படுவோம். அப்புறம் விஷயம் புரிஞ்சு வருத்தப்படுவோம். உங்களுக்கும் அந்த மாதிரி அனுபவம் ஏற்பட்டதுண்டா? நீங்க, எதுக்காவது அப்பா, அம்மாகிட்டே சண்டை போட்டதுண்டா? அப்புறம் என்ன ஆச்சு?

இனிய அப்பா, அம்மா!



முழு வெள்ளைத்தாளில் ஒரு பக்கம் மிகாமல் அந்த அனுபவத்தை எழுதியனுப்புங்க. அத்துடன் கீழ்க்கண்ட கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்புங்க. முடிஞ்சா உங்க அப்பா, அம்மாவோடு நீங்க இருக்கிற புகைப்படத்தையும் அனுப்பலாம். ஆனால் கட்டாயமில்லை. தேர்ந்தெடுக்கப்படும் சுவையான அனுபவங்களுக்குப் பரிசுத்தொகை பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி. **முடிவு தேதி : 18.5.2007**

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம் - பரிசுப்போட்டி,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032.

இனிய அப்பா, அம்மா - போட்டி

என் பெயர்: ....

பெற்றோர் பெயர்கள்: ....

வகுப்பு, பள்ளி: ....

வீட்டு முகவரி: ....

....

தெருவில் விற்கும் தின்பண்டத்தைத்
தீண்டக் கூடாது!
தித் திப்பாக உள்ளதென்று
தின்னக் கூடாது!

உருவில் பெரிதாய் இருக்குதென்றே
உவகை கூடாது!
விலையில் மலிவாய்க் கிடைக்குதென்று
வாங்கக் கூடாது!




கூடாது! கூடாது!

தூசு படிந்த தண்ணீரதனைப்
பருகக் கூடாது!
தொற்றும் நோய்கள் பலப்பலவுண்டு
மறக்கக் கூடாது!

தூய்மையான இடத்தை நாமும்
கெடுக்கக் கூடாது!
சுத்தம் என்றும் நன்மை நல்கும்
மறக்கக் கூடாது!

- ச.கனககுப்புலெட்சுமி,
எட்டாம் வகுப்பு,
அரசு உயர்நிலைப்பள்ளி, மூலைக்கரைப்பட்டி



ஓலை விசிறி!

பார்க்க அழகு விசிறி
பனை ஓலையில் விசிறி
வெயில் காலம் வந்தால்
விரும்பித் தேடும் விசிறி!

கையில் அடங்கும் விசிறி
காற்றைக் கொடுக்கும் விசிறி
எளிய விலையில் கிடைக்கும்
எல்லோரும் விரும்பும் விசிறி

மின்சாரம் இல்லா நேரத்தில்
மிக்க உதவும் விசிறி
பார்க்க அழகு விசிறி
பனை ஓலையில் விசிறி!

- ப. இனியன், பத்தாம் வகுப்பு,
ஜெயகோபால் கரோடியா தேசிய
மே.நி.பள்ளி, சென்னை - 59



பட்டு வீட்டு மாடியில்
பட்டம் விடலாம் வாங்க!
கிட்டு சுப்பு பானு ராணி
கிட்டே வந்து பாருங்க!

முருகன் விட்ட பட்டமொன்று
மேகம் முட்டப் போகுது!
கந்தன் விட்ட பெரிய பட்டம்
குட்டிக் கரணம் போடுது!

தாம்ஸன் தங்கை ரோஸி பாப்பா
கையைத் தட்டிச் சிரிக்குது!
மாலை நேரக் காற்றும் ஜோராய்
முகத்தில் வந்து மோதுது!

பட்டம் விட்டு முடித்ததும்
பாட்டி கொடுப்பாள் பணியாரம்!
பங்கு போட்டு குஷியாய் தின்ன
பசங்க எல்லாம் வாங்களேன்!

- திலீபன், திருச்சி

பட்டம்!



மு.ராம்பிரசாந்த்,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ வையாபுரி மேல் நிலைப்பள்ளி,
சங்கரன்கோவில், திருநெல்வேலி





பி. மணிகண்டன்,
நான்காம் வகுப்பு,
லிட்டில் ஃப்ளர் பள்ளி,
திருநெல்வேலி



ஜெரா. அனு,
பதினொராம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா ஈஸ்வர்
வித்யா மந்திர்
மெட்ரிக் பள்ளி,
பொழிச்சலூர்

உங்கள் கைவண்ணம்!



ஆர். போஜராஜன்,
ஐந்தாம் வகுப்பு,
குருஞான சம்பந்தர்
மிஷன் மெட்ரிக்
மே.நி.பள்ளி
மயிலாடுதுறை




எஸ். பரணிகுமார்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப் பள்ளி,
அரித்துவாரமங்கலம்



எம். சுகன்யா,
ஐந்தாம் வகுப்பு, தி சில்ட்ரன்ஸ் கார்டன் பள்ளி,
சென்னை - 4

மனதில் உறுதி வேண்டும்,
வாக்கினிலே இனிமை வேண்டும்;
நினைவு நல்லது வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்;
கனவு மெய்ப்பட வேண்டும்,
கைவசமாவது விரைவில் வேண்டும்;
தனமும் ... இன்பமும் வேண்டும்,
தரணியிலே பெருமை வேண்டும்!
— மகாகவி பாரதியார்.



நா. கார்த்திகேயன்,
ஏழாம் வகுப்பு டக்டன் மெட்ரிக் மே.நி.பள்ளி,
சென்னை.





அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று
இல்லறமல்லது நல்லற மன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஒருவனைப் பற்றி ஓரகத் திரு.

ஆறாம் வகுப்பு அன்னை வேளாங்கண்ணி மெட்ரிக் பள்ளி
பெரியகுளம்.

டாக்டர். ராதாகிருஷ்ணன்.

மாணவர்களிடம் இனிமையாகப் பழகும் குணம் படைத்தவர் ராதாகிருஷ்ணன். ஆசிரியர் என்றாலே ஒரு பயம், வெறுப்பு, கசப்பு இப்படி மாணவர்களுக்கு ஏற்படுவது உண்டு. ஆனால் ராதாகிருஷ்ணனிடம் பயின்ற மாணவர்கள் அவரை அன்போடு நேசித்தார்கள். பக்தியோடு போற்றினார்கள்.



* பொன் மொழிகள் *

★ அன்புள்ள இதயம் என்றும் இளமையானது

★ பயன் கருதாது செய்யும் பணியே தொண்டாகும்

★ தளர்ச்சியின்றி பணியாற்றினால் நன்மை உண்டாவது உறுதி

★ எதையும் இறுதிவரை முயன்று செய்ய வேண்டும்



ஸ்ரீ. பத்மஸ்ரீ,
ஏழாம் வகுப்பு, ஸ்ரீ ஞானானந்தா மெட்ரிக் மேநிப் பள்ளி,
திருக்கோவிலூர்

சூப்பர் கையெழுத்து!



உயர வேண்டுமானால் பணிவு வேண்டும்.

பண்புள்ள மனிதன் உலகத்தையே வென்று விடுவான்

கோழைகள், ஒழுக்கத்தை பின்பற்ற முடியாது.

திருப்தியுள்ள மனமே தீராத விருந்து.

ஆர். ஸ்ரீவித்யா,
நான்காம் வகுப்பு, ஆர்.கே.வி. எம் பள்ளி,
கோவை

சோம்பல்...

முன்னேறிச் சென்றிட தடை செய்யும்,
முயற்சியை வீணாய்ச் சிதறடிக்கும்.
தவறுகள் நடக்க இடம் கொடுக்கும்
வெறுப்பை பிறர்க்கு உண்டாக்கும்.
நினைத்த வேலை கொடுக்காது,
மறக்க வைக்கும் உழைப்பையே.
சுறு சுறுப்பென்னும் அம்பினால்,
சோம்பல் பறவையை விரட்டுங்கள்.
விறு விறுப்பாக உழையுங்கள்,
வெற்றிக்கனிகள் தேடி வரும்.



ர. கௌதமன்,
நான்காம் வகுப்பு, ஸ்ரீமதி சுந்தரவல்லி நினைவுப் பள்ளி
சென்னை

வாவ்!

"ஆண்ட்டி, உங்களுக்கு கூரியர் வந்திருக்கு."

"கையெழுத்தைப் போட்டு வாங்கி வா, பானு."



"இந்தாங்க! பார்சல் ரொம்ப வெயிட்டா இருக்கு. உள்ளே என்ன இருக்கு ஆண்ட்டி?"

"பிரிச்சுப் பாரு."

"வாவ்! ஸ்டோரி புக்ஸ். நிறைய இருக்கும் போலிருக்கே?"

"மொத்தம் பன்னிரண்டு இருக்கணும். எல்லாமே 'நியூ ஹொரைசன் மீடியா' என்ற நிறுவனம் வெளியிட்டிருக்கிற 'பிராடிஜி' (Prodigy) என்ற குழந்தை நூல்கள்."

"அட! ஆங்கிலத்துலதான் இந்த மாதிரி புத்தகங்களைப் பார்த்திருக்கோம். தமிழ்ல இப்பதான் முதல் முறையாப் பார்க்கறேன்."

"உண்மைதான் விஜி. முழுக்க முழுக்க வண்ணப் படங்களுடன் உயர் அச்சுத் தாளில் வெளியிட்டிருக்காங்க. அறிவியல், வரலாறு, உயிரினங்களைப் பற்றிய தகவல்களைக் கதை வடிவத்தில் சுவாரஸ்யமாக் கொடுத்திருக்காங்க."

"எல்.கே.ஜி. படிக்கிற என் அக்கா பையனுக்கு பர்த்டே வரப் போகுது. அப்ப வாங்கித் தரலாம் போலிருக்கே!"


"கண்டிப்பா. சின்னக் குழந்தைகளும் சிரமமின்றி படிச்சுப் புரிஞ்சுக்கற வகையில் பெரிய எழுத்தில், எளிமையா இருக்கு. இப்ப என்னோட பரிசா உங்களுக்கு இவற்றைக் கொடுக்கறேன், வாங்கிக்கங்க!"

"ஓ! தேங்க்யூ ஆண்ட்டி."


நூல்கள்:

■ விண்வெளியில் விக்கி ■ ஜப்பானைச் சுத்திப் பார்க்கப் போறேன். ■ ரயிலே... ரயிலே... ■ விக்கியைத் துரத்திய டைனோசர்


கிடைக்குமிடம் : நியூ ஹொரைசன் மீடியா(பி)லிட், 33/15, எல்டாம்ஸ் ரோடு, ஆழ்வார்பேட்டை, சென்னை - 600 018


சூரன் சுப்பு!
சுப்பு முயலுக்கு கர்வம் அதிகம். தவிர முன்கோபி.
ஏய்! இது எனது இடம். போ!
ஒரு நாள் சுப்பு ஓய்வாக இருக்கையில்...
என்ன சத்தம் அது?
கக்... கக்... கக்... கக்...
வெளியே -
யார் இவன்?
கக்... கக்...
ஒட்டகச் சிவிங்கி பசியாறிக் கொண்டிருந்தது.
ஏய்! இங்கே என்ன சத்தம்?
சாரி! உன் தூக்கத்தைக் கெடுத்துட்டேனா?
நான் காட்டுக்குப் புதியவன் நண்பா!
யாருடா நண்பன்? போடா!


ஒட்டகச்சிவிங்கி வேதனையுடன் சென்றது.
சரியான நோஸ்கட் கொடுத்தே சுப்பு!
அதுதான் சுப்பு!
பிறகு...
எனக்கு நண்பனாக இருக்க யாருக்குத் தகுதி இருக்கு!
அப்போது
ஏய்!
சூப்பர் தீனி!
ஆ! நான் காலி!
உதவி! உதவி!
சுப்புவின் அதிர்ஷ்டம்...
உதவி!
சே, நழுவிடுச்சே!



ஓவ்!
எப்படி கீழே இறங்குவது?
அப்போது -
ஹலோ!
யா... யாரது?
நண்பா, உதவி தேவையா?
© JINGLE BELL CREATIONS
சுப்புவைக் கீழே இறக்கியது.
நண்பா! உனக்கு மிகப் பெரிய மனசு நன்றி!
இது சாதாரண உதவிதான் நண்பா!
அன்று முதல் சுப்பு எல்லோருக்கும் நண்பனானது.



3 இன் 1



ஹாய்! இது ஒரு த்ரீ - இன் - ஒன் போட்டி. மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டு மூன்று விதமான வயதினருக்கு நடத்தப்படுகிறது. கலந்துக்கங்க, கலக்குங்க!

வண்ணம் தீட்டுங்க! பரிசு ரூ.500/-

மேல் பக்கம் கொடுக்கப்பட்டுள்ள படத்துக்குப் பொருத்தமான வண்ணம் தீட்டி, கூப்பனையும் பூர்த்தி செய்து, அந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்ப வேண்டும். இந்தப் போட்டியில் எட்டு வயதிற்குட்பட்டோர் மட்டுமே கலந்து கொள்ளலாம். சிறந்தவை ஐந்து தேர்வு செய்யப்பட்டுப் பரிசு பகிர்ந்தளிக்கப்படும்.

ஜோக் எழுதுங்க! பரிசு ரூ.250/-

இதில் ஒன்பது முதல் பன்னிரண்டு வயதிற்குட்பட்டோர் கலந்து கொள்ளலாம். ஒரு போஸ்ட் கார்டில் படத்துக்குப் பொருத்தமான ஜோக் எழுதி (சிறுமியும், கோழியும் பேசுவது போல்) அனுப்புங்கள். சிறந்த ஐந்து ஜோக்குகளுக்குப் பரிசு பகிர்ந்தளிக்கப்படும். மறக்காமல் படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிடவும்.

கவிஞராகுங்க! பரிசு ரூ.250/-

பன்னிரண்டு வயதிற்கு மேற்பட்ட பள்ளி மாணவர்களுக்கான போட்டி. இதே படத்துக்கு, பன்னிரண்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை எழுதி, படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட்டு அனுப்புங்கள். தேர்ந்தெடுக்கப்படும் ஐந்து கவிதைகளுக்கு, பரிசு பகிர்ந்தளிக்கப்படும். மூன்று போட்டிகளுக்கும் முடிவு தேதி: **31.5.07**

அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம்
கோடை விடுமுறைப் போட்டி - 2
47NP- ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

பெயர்: ....
வயது: .... வகுப்பு: ....
பள்ளி, வீட்டு முகவரி: ....
....
....



கரடி சொல்

கருமை நிறத்தில் காட்டினிலே
கரடி நானும் வாழ்ந்தேனே!
உருவில் கறுப்பே ஆனாலும்
உள்ளம் எனக்கு வெளுப்பேதான்!

காட்டில் ஒருநாள் தேன்குடித்து
களிப்புடன் இருந்த வேளையிலே
வேட்டைக்காரன் பார்த்தானே
விரட்டி என்னைப் பிடித்தானே!

நெஞ்சம் மகிழ உண்டுறங்கி
நீண்ட வனத்தில் திரிந்தவனை



சங்கிலி கொண்டு கட்டிட்டான்
 சற்றும் இரக்கம் இல்லாமல்!

மிக்க பலம் இருந்திடினும்
 மனிதன் தனது அறிவாலே
வருத்தி என்னைப் பணிய வைத்தே
 வருவாய் ஈட்டத் தொடங்கிட்டான்!

உடலின் உழைப்பு இல்லாமல்
 உண்ண நினைக்கும் இவனிடத்தில்
இடக்கு செய்யா திருக்கின்றேன்
 இழுத்து வருகிறான் விலங்குடனே!

சுற்றி பிச்சை கேட்டிடணும்
 சொல்வதைப் போல ஆடிடணும்
சற்றே தயங்கி நின்றாலும்
 சட்டென கம்பால் அடிப்பானே!

வேடிக்கை பார்க்கும் சிறுவர்களே
 வேண்டிக் கேட்பேன் உங்களிடம்
தேடிச் சென்று காட்டினிலே
 திரும்பவும் என்னைச் சேர்த்திடுங்கள்!

கேளாய்!



I. 1. காதில்லாமல் கேட்பேன்; வாயில்லாமல் பேசுவேன்; காற்றில்தான் பிறப்பேன் - நான் யார்?

2. எட்டுக்கால் ஊன்றி, இருகால் படமெடுத்து, வட்டக்குடை



வெள்ளை குதிரை பறக்குது!

பிடித்து வருகிறார் பண்ணையார் அவர் யார்?

3. வேலியைத் தாண்டி வெள்ளை குதிரை பறக்குது - அது என்ன?

4. நோயின்றி மருந்து சாப்பிடுவான்; வாயின்றி கூச்சல் போடுவான் - அவன் யார்?

5. உயர பறக்கும்; ஊன்று கோலில் நிற்கும் - அது என்ன?

6. குட்டிப் பசங்க வச்சிருக்காங்க சக்கரத்தண்ணி; வேண்டாதவன் வந்தாக்க எடுத்துடுவாங்க பின்னி! அவங்க யார்?

- ஃபாத்திமா,
கீழக்கரை,
இராமநாதபுரம்

II. 1. ஒரு குளத்தில் ஒரே மீன், எட்டிப் பார்த்தாலும் வேறு குளம் போகாது - அது என்ன?

2. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் - அது என்ன?

3. தொப்பைனுக்கு ஒரு வாசல் தோழனுக்கு இரு வாசல் - அது என்ன?

- தி.சே.அறிவழகன்,
திருப்புவனம்

விடைகள்:

I. 1. எதிரொலி
2. நண்டு 3. பருத்தி
4. பட்டாசு 5. கொடி
6. தேனீ

II. 1. நாக்கு 2. தராசு
3. சட்டை



மீண்டும் உதயம்!



முதலில் வழக்கமான ஃப்ளாஷ்பேக்...

எதிலும் புதுமை; அதிலும் எளிமை! இதுதான் கோகுலம் அன்று முதல் இன்றுவரை கடைபிடித்து வருகிற விஷயம். செய்கிற விஷயம் புதுமையாக இருக்க வேண்டும். அதேநேரம் அந்த விஷயம் எல்லோரும் கலந்துகொண்டு பயனடைகிற வகையில் எளிமையாக இருக்க வேண்டும். அப்படி தொடங்கப்பட்டதுதான் 'கோகுலம் சிறுவர் சங்கம்'

குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பாவின் முயற்சியால் இந்தச் சிறுவர் சங்கம் தொடங்கியது. அதன்படி பிப்ரவரி '83 இதழில் ஒரு கூப்பன் வெளியிடப்பட்டது. அந்தக் கூப்பனைப் பூர்த்தி செய்து அனுப்பினால் அவர்களுக்கு ஓர் உறுப்பினர் அட்டை அனுப்பப்படும். அதில் கோகுலம் 'லோகோ' (பிள்ளையாரும் கண்ணனும்) அச்சிடப்பட்டிருக்கும். உறுப்பினரின் பெயர், முகவரியுடன் அவர்களுக்கென ஓர் எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும்.

அந்த உறுப்பினர் அட்டை கிடைத்த பிறகு வாசகர், தான் கோகுலத்துக்கு அனுப்புகிற கடிதம், கதை, கவிதையென எதுவாக இருந்தாலும் பெயருடன் உறுப்பினர் எண்ணையும் குறிப்பிட வேண்டும். அப்படி உறுப்பினரானவர்களின் பெயரும் முகவரியும் கோகுலத்தில் தொடர்ந்து

கோகுலம்
சிறுவர் சங்க
15001-வது உறுப்பினர்



அ. முகமது இக்பால்
திருச்சி

வெளியாயின.

சரி, இதனால் என்ன பயன்?

இருக்கிறது! முதலில் வாசகர்களுக்கிடையே பேனா நட்பு உண்டானது. ராமுவின் கதை வந்தால் சோமுவும், சோமுவின் கவிதை வெளியானால், ராமுவும் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதி, தங்கள் எண்ணத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

அடுத்ததாக, அவ்வாறு கோகுலத்தில் உறுப்பினரான வாசகர்களுக்கென்றே பலவிதப் போட்டிகள் நடத்தப்பட்டன. பல்வேறு பரிசுகளும் வழங்கப்பட்டன. அதுமட்டுமின்றி கோகுலத்தில் உறுப்பினர்களான பத்து பேர் ஒரே ஊரைச் சேர்ந்தவர்களாக இருந்தால், அவர்கள் ஒன்று சேர்ந்து அங்கே ஒரு கிளைச் சங்கம் ஆரம்பிக்கலாம். அப்படி எத்தனையோ கிளைச் சங்கங்கள் தோன்றின.


அந்தச் சங்கத்தில் வாரா வாரம் கூடி, தாங்கள் வேறு பத்திரிகைகளில் படித்த கதைகள், கட்டுரைகளைப் பற்றி விவாதிப்பார்கள். இதனால், தெரியாத பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். நேரம் கிடைக்கும்போதெல்லாம் வள்ளியப்பா அந்த ஊர்களுக்குச் சென்று சிறுவர் சங்க விழாவில் கலந்து கொள்வார்.



இந்தப் புதுமையான முறைக்கு அன்றைய சிறுவர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்ததாம்! உறுப்பினர்களின் எண்ணிக்கை இருபதாயிரத்தைத் தாண்டியது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்! அப்படித் தொடங்கப்பட்ட கோகுலம் சிறுவர் சங்கத்தின் முதல் உறுப்பினரானவர் சென்னையைச் சேர்ந்த எஸ்.எஸ்.ராமன். அவரது புகைப்படம் மார்ச் '83 இதழில் வெளியிடப்பட்டது. அதேபோல் பதினைந்தாயிரத்து ஒண்ணாவது உறுப்பினரின் புகைப்படமும் டிசம்பர்'86 இதழில் வெளியானது. அவர் திருச்சியைச் சேர்ந்த அ.முகமது இக்பால். இருவரின் புகைப் படங்களும் இங்கே வெளியாகியுள்ளது.

ஹலோ மிஸ்டர் ராமன், மிஸ்டர் இ.முகம்மது இக்பால், இப்போதும் நீங்கள் கோகுலம் படிக்கிறீர்களா? அப்படியானால் இதைப் படித்ததுமே எங்களைக் கடிதம் மூலமோ, தொலைபேசியிலோ, தொடர்பு கொள்ளுங்கள். உங்களின் அன்றைய முகவரியையும் தற்போ

• உறுப்பினர் அட்டை


கோகுலம்
சிறுவர் சங்கம்



தைய முகவரியையும் சரியா கச் சொன்னால் உங்களுக்கு ஒரு பரிசு காத்திருக்கிறது!

கோகுலம் சிறுவர் சங்கம் முதல் உறுப்பினர்



சரி, இப்போது ஃப்ளாஷ்பேக்கை முடித்து நிகழ் காலத்துக்கு வருவோம். சமீபத்தில் ஒருநாள் கோகுலம் ஆசிரியர் என்னை அழைத்துப் பேசினார்.

"பிரவீன், இருபத்துநாலு வருடங்களுக்கு முன் அழ.வள்ளியப்பா தொடங்கிய கோகுலம் சிறுவர் சங்கத்தை மறுபடியும் தொடங்கினால் எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

"மிகவும் நன்றாக இருக்கும் மேடம்" என்றேன்.

"அப்படியானால் தொடங்கி விடுவோம். இதைப் பற்றி இன்னும் விரிவான தகவல் தேவை. அதனால் நமது கோகுலத்தின் முன்னாள் கௌரவ ஆசிரியர் ஹரிஹரன் (ரேவதி) சாரிடம் பேசி விஷயங்களைத் தெரிஞ்சுக்க" என்றார்.

ரேவதி என்கிற ஹரிஹரன் சாரைப் பற்றி உங்களுக்குத் தெரியுமல்லவா? அவர் வள்ளியப்பாவின் பெருமைக்குரிய சீடர்களில் ஒருவர். குழந்தைகளுக்காக ஏராளமான கதை, கட்டுரைகளை எழுதியவர். கோகுலத்தின் கௌரவ ஆசிரியராகப் பணியாற்றியவர் அவருடன் ஆசிரியர் தொலை பேசியில் தொடர்புக் கொண்டு பேசினார்.

"மறுபடியும் கோகுலம் சிறுவர் சங்கமா? பலே! பலே!! நல்ல விஷயம்தான். இதில் என்னால் என்ன உதவி செய்ய முடியுமோ, அதைத் தாராளமாகச் செய்கிறேன்" என்றார்.

ஒருநாள் அலுவலகத்துக்கும் வந்தார். ஆசிரியர், ஹரிஹரன் சார், நான் மூவருமாக சிறுவர் சங்கம் ஆரம்பிக்கும் முறையைப் பற்றிப் பேசினோம். ஒரு திட்டமும் தயாரித்துள்ளோம். இந்த கோகுலம் சிறுவர் சங்கத்தில் எப்படி சேருவது என்ற விவரமும் கூப்பனும் அடுத்த இதழில் வெளியாகும்.

தயாராக இருங்க, ஃப்ரெண்ட்ஸ்! கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினராகுங்க. அதன் மூலம் உங்களுக்கு நிறைய நண்பர்கள் கிடைக்கப் போறாங்க. அதோடு புதுமையான போட்டிகள், பல்வேறு பரிசுகளும் கிடைக்கும். மொத்தத்தில் வித்தியாசமான அனுபவங்களுக்குக் குறைவிருக்காது. ஓகே?

ஸாரி!


இந்த இதழில் 54-ஆம் பக்கம் இடம் பெற்றுள்ள 'சூப்பர் கையெழுத்து' பகுதியில் இருவர் பெயர்கள் விடுபட்டுள்ளன. தவறுக்கு வருந்துகிறோம். அவர்களின் பெயர்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது :

* எஃப்.ரோஹின் ரிச்சர்டு, ஆறாம் வகுப்பு, அன்னை வேளாங்கன்னி மெட்ரிக் பள்ளி, பெரியகுளம்,
* ரா.கஜப்பிரியா, ஆறாம் வகுப்பு, நகரமேல்நிலைப்பள்ளி, கும்பகோணம்.

சென்ற இதழில்...

கண்ணன், முருகன், ஈஸ்வரி, எழிலரசி நான்கு பேரும் ஆற்றங்கரையில் மணல் வீடு கட்டி விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே வரும் 'ஜடாமுடியன்' என்ற மந்திரவாதி அதைப் பெரிய வீடாக்கி, அவர்களை உள்ளே அழைத்துச் செல்கிறான். நான்கு பேரையும் ஆபத்தில் சிக்க வைத்துவிட்டுச் சென்று விடுகிறான். இனி...

மந்திரப்பட்டி, தந்திரப்பட்டி!



"கண்ணா! மழை வர்ற மாதிரி இருக்கு. அதுக்குள்ள வெளியே போய்டணும். இல்லேன்னா ஆபத்து" என்றான் முருகன்.

"புரியுது. ஈஸ்வரி, உனக்கு அருகே மூங்கில் கம்பு இருக்கிறது பார். அதை அகழியைத் தாண்டி மண்ணில் ஊன்று. மறுமுனையைப் பிடித்துக்கொண்டு தாவு. வித்தைக்காரர்கள் தெருவில் வித்தை காட்டுவதைப் பார்த்திருக்கிறாய் அல்லவா? அப்படி" என்றான் கண்ணன்.

"ஐயோ! நான் மாட்டேன். தவறிப் போய் அகழியில் விழுந்து விட்டால் என்ன ஆவது?" என்று நடுங்கினாள் ஈஸ்வரி.

"சரியாகக் கணக்கிட்டுத் தாவினால் அகல் விளக்கு இருக்கும் இடத்துக்கு வந்து விடலாம்" என்றான் முருகன்.

"முடியவே! முடியாது! என் அப்பா, அம்மாவுக்கு நான்

ஒரே பெண்" என்று தீர்மானமாக மறுத்தாள் ஈஸ்வரி.

"சரி! அந்த மூங்கிலை இப்படித் தூக்கி வீசு. நான் பிடித்துக்கொள்கிறேன்" என்றான் கண்ணன்.

ஈஸ்வரி தூக்கி வீசிய மூங்கிலை கண்ணன் பிடித்துக் கொண்டான். பிறகு அதை அகழியைத் தாண்டித் தரையில் அழுத்தமாக ஊன்றினான். தன் அருகே இருந்த மண்வெட்டியையும் எடுத்துக் கொண்டான். மூங்கிலின் மறுமுனையைப் பிடித்துக் கொண்டு தாவினான்.

வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு போல் அந்தரத்தில் பயணமாகி அகல் விளக்கு அருகே வந்து 'தொப்'என விழுந்தான்.

"கண்ணா! பார்த்து" என்று பயத்தில் அலறினாள் எழிலரசி.

"பயப்படாதீர்கள். எதுவும் ஆகவில்லை. முருகா இதே போல் நீயும் வா. வரும்போது மறக்காமல் உன்னருகில்



இருக்கும் கயிற்றைக் கொண்டுவா" என்ற கண்ணன் மூங்கிலை வீசினான்.

முருகனும் அதே போல் அந்தரத்தில் பறந்து வந்து சேர்ந்தான். "அடுத்து என்ன செய்வது?" என்று கேட்டான்.

"கயிற்றை இந்த எண்ணெயில் நனைத்து, கொளுத்துவோம். அதை முதலைகள் மீது வீசுவோம்" என்றான் கண்ணன்.

மண்வெட்டியைக் கொண்டு கயிற்றை சிறுசிறு துண்டுகளாக கத்தரித்தனர். அவற்றை அகல் விளக்கிலிருந்த எண்ணெயில் நனைத்து பற்ற வைத்து அகழியில் இருந்த முதலைகளை நோக்கி வீசினர். அகழி முழுவதும் தீ பரவியது. முதலைகள் அங்கும் இங்குமாக நீந்தின. முடிவில் தீயில் கருகி இறந்தன.

"ஈஸ்வரி, எழிலரசி இனி பயமில்லை. அகழியில் மண்ணையும் கற்களையும் போட்டு மூடுவோம். அதன் வழியே நீங்கள் எளிதாக வந்து விடலாம்" என்றான் முருகன்.

அப்படியே செய்தார்கள். ஈஸ்வரியும், எழிலரசியும் பாதுகாப்புடன் அகழியைத் தாண்டி வந்தனர். பிறகு நால்வரும் வாசல் கதவினைத் திறந்து கொண்டு வெளியே வந்தனர்.

"இங்கேயுள்ள அகழியை எப்படித் தாண்டுவது?" என்று கேட்டான் ஈஸ்வரி.

"உள்ளே செய்ததைப் போல்தான். இருவர் இருவராக மறுபக்கம் சென்று விடலாம். நீ என்னுடனும், எழிலரசி முருகனுடனும் வரட்டும்" என்றான் கண்ணன்.

அதன்படி தரையில் கம்பை ஊன்றி இருவர், இருவராக அகழியைத் தாண்டினார்கள்.

"அப்பாடி! தப்பித்தோம்" என்றான் முருகன்.

அப்போது அங்கிருந்த ஒரு பெரிய கல் திடீரென உயிர் பெற்றது. அதுவேறு யாருமில்லை. ஜடாமுடியன்தான். பலமாகச் சிரித்து, கைகளைத் தட்டினான்.

"பலே பசங்களா! மீன் குஞ்சுகளுக்கு நீந்த கற்றுத்தர வேண்டியதில்லை என்பார்கள். தந்திரப்பட்டிச் சுட்டிகளான நீங்கள் அதை நிரூபித்து விட்டீர்கள். ஆனால் என் தோல்வியை நான் அவ்வளவு சுலபத்தில் ஒப்புக்கொண்டு விடுவேனா? அடுத்த விளையாட்டுக்குப் போவோம். கடலில் அலையைப் பார்த்திருப்பீர்கள். ஆற்றில் அலையைப் பார்த்ததுண்டா? அதோ வருகிறது" என்றான்.

நால்வரும் திரும்பிப் பார்த்தனர். ஆற்று நீர் நுரைநுரையாக அவர்களை நோக்கி வந்தது. ஒரு கணம் திகைத்தவர்கள், பிறகு ஓட்டமாகச் சென்று அருகிலிருந்த மரத்தில் ஏறிக் கொண்டார்கள். மரத்தைச் சுற்றித் தண்ணீர்!

கோடை கடி!

"கல்யாணத்துல ஏன் வாழை மரம் கட்டி வச்சிருக்காங்க?"

"கட்டி வைக்கலைன்னா கீழே விழுந்துடுமே, அதுக்குத்தான்!"

– எம்.சரவணன்




கோடை கடி!

''மரியாதையான பூதம் எது தெரியுமா?''

'' 'ஜீ' பூம்பா!''

- ஆர்.ஆர்.பூபதி



"ஹா...ஹா... மரத்தில் ஏறினால் தப்பி விடுவீர்களா? இப்போது பாருங்கள்'' என்ற ஜடாமுடியன், தனது கையிலிருந்த மந்திரக் கோலை நீட்டி மந்திரத்தை உச்சரித்தான்.

அடுத்த நொடி, மரம் சிறிது சிறிதாக மண்ணுக்குள் புதைய ஆரம்பித்தது. நான்கு பேரும் நடுங்கி விட்டனர்.

"போங்க பசங்களா! பாதாள உலகில் நிறைய நண்பர்கள் கிடைப்பார்கள். கொஞ்ச நாளைக்கு அங்கே தங்கிட்டு வாங்க'' என்று கூறி அட்டகாசமாகச் சிரித்தான் ஜடாமுடியன்.

அப்போது முருகன் துணிச்சலுடன் ஜடாமுடியனை நோக்கிப் பாய்ந்தான். அதில் நிலை தடுமாறி கீழே விழுந்தான் ஜடாமுடியன். அவன் கையிலிருந்த மந்திரக்கோலும் கீழே விழுந்தது. முருகன் சட்டென அதை எடுத்துக் கொண்டான்.

அந்த மந்திரக்கோலை மரத்தை நோக்கி நீட்டிய முருகன் "அப்படியே நில்'' என்றான்.

மரம் நின்று விட்டது. ஆற்றுநீரும் பின்னோக்கிச் சென்று விட்டது. கண்ணன், ஈஸ்வரி, எழிலரசி ஆகிய மூவரும் இறங்கி வந்தார்கள். ஜடாமுடியன் பயத்துடன் எழுந்து நின்றான்.

''ஏய் பசங்களா! மரியாதையாக மந்திரக்கோலைக் கொடுத்து விடுங்கள்! இல்லையென்றால் தொலைத்து விடுவேன்'' என்றான் ஜடாமுடியன்.

"சும்மா மிரட்டாதே! இந்த மந்திரக் கோல் இருக்கும் வரைதான் நீ மந்திரவாதி; இல்லாவிட்டால் கோமாளி என்பது எங்களுக்குத் தெரியும். நண்பர்களே, இவனை என்ன செய்யலாம்?'' என்று கேட்டான் முருகன்.

"நம்மை மண்ணில் புதைக்கப் பார்த்தானல்லவா? அதேபோல் நாம் இவனைப் புதைத்து விடுவோம்" என்றாள் ஈஸ்வரி.

"சே! சே! பாவம். அப்படி செய்ய வேண்டாம். அப்புறம் மந்திரப்பட்டிக் காரர்களுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்!" என்றாள் எழிலரசி.

"அப்படியானால் என்ன செய்யலாம்? இப்படியே விட்டாலும் நாளை மீண்டும் தொல்லை தருவானே...'' என்றான் கண்ணன்.

"தொல்லை தராத மாதிரி செய்து விடுவோம். எழிலரசி நீ ஆட்டுக்குட்டி வளர்க்க ஆசைப்பட்டாயல்லவா? இதோ" என்ற முருகன், மந்திரத்தை உச்சரித்தான்.

அவ்வளவுதான்! ஜடாமுடியன் ஆட்டுக்குட்டியாக மாறி விட்டான்! எழிலரசி அதைத் தூக்கிக் கொண்டாள். முருகன் மந்திரக்கோலை உடைத்து ஆற்றில் வீசினான்.

அப்போது மழை தூறத் தொடங்கியது.

"சீக்கிரம் வாருங்கள். மழை வலுக்கும் முன் வீடு போய்ச் சேருவோம்" என்றாள் ஈஸ்வரி.

"ஆமாம்! ஆமாம்! நாம் நனைந்தாலும், பாவம், ஆட்டுக்குட்டி நனையக் கூடாது" என்று எழிலரசி கூற, மற்றவர்கள் சிரித்தார்கள்.

(முற்றும்)

ஹலோ தோழர்களே!

கடந்த மாதம் கேட்ட ஐந்து கேள்விகளுக்கு நீங்கள் சொன்ன பதில்கள் இங்கே. வழக்கம் போல் ஒவ்வொரு கேள்விக்கும் இருவர் தேர்வு செய்யப்பட்டு பரிசு அளிக்கப்படுகிறது. இடையிடையே அடைப்புக் குறிகளில் என்னுடைய கமெண்ட்டும் வருகிறது. சரியா?

1. டாக்டர் அப்துல்கலாம் மீண்டும் குடியரசுத் தலைவர் பணியைத் தொடரலாமா? அல்லது ஆசிரியராகலாமா? உங்கள் கருத்தைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

- அப்துல்கலாம் மாணவச் சமுதாயம் மீது மிகுந்த அக்கறையுள்ளவர். அவர் ஆசிரியராக இருந்து, ஒரு கருத்தைச் சொல்லும்போது அது குறிப்பிட்ட பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே பயன் படும். அதுவே குடியரசுத் தலைவராக இருந்து சொல்லும்போது, அது செய்தித்தாள்களில் முக்கிய இடம் பிடித்து, நாடு முழுவதுமுள்ள மாணவர்களைச் சென்றடையும். ஆகவே அவர் மீண்டும் குடியரசுத் தலைவர் பணியையே தொடரலாம்!

– ந.ராமசந்திரன்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி
வித்யாலயா
மெட்ரிக் பள்ளி, விழுப்புரம்

(கரெக்டா சொன்னீங்க, சபாஷ்!)

- டாக்டர் அப்துல்கலாம் மீண்டும் குடியரசுத் தலைவராகிதான் நற்பெயரோ, சிறப்போ, கூடுதல் திறமையோ பெறப்போகிறார் என்ற நிலை இல்லை. இந்த ஐந்து ஆண்டிலேயே



அவற்றைப் பெற்று, தமக்கிட்டப் பணியைச் சிறப்பாக செய்து விட்டார். ஆகவே இனி அவர் விரும்பிய வாறு ஆசிரியராய் இருக்கலாம். இதனால் அவருக்கும் சுமை நீங்கி 'ஆத்ம திருப்தி' கிடைக்கும். அவரிடம் கல்வி கற்ற பெருமை பல மாணவர் களுக்குக் கிடைக்கும். ஆகவே அவர் ஆசிரியராகட்டும்!

– பா.சௌந்தர்யா,
பதினொராம் வகுப்பு,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் மே.நி. பள்ளி,
மடிப்பாக்கம்

(அட! இது வித்தியாசமான கோணமா இருக்கே, குட்!)

பேட்டிங் மட்டுமின்றி சச்சினைப் போலவே சுழல் பந்து வீச்சாளராகவும் இருக்கிறார். இக்கட்டான சூழ்நிலையின்போது அணி வெற்றிபெற அவர் எடுக்கும் முயற்சியும் சிறப்பாக உள்ளது. ஆகவே 'யுவராஜ் சிங்'தான் அடுத்த சச்சின்.

– எஸ்.கே.அபிஷேக்,
நெய்வேலி

(உங்களைப் போன்றோரின் நம்பிக்கையை 'யுவராஜ்சிங்' காப்பாற்ற வாழ்த்துவோம்!)



2. இளம் கிரிக்கெட் வீரர்களில் அடுத்த சச்சின் என்று யாரைச் சொல்வீர்கள்? காரணம்...

பதறாத காரியம் சிதறாது!

• 'யுவராஜ் சிங்'கைச் சொல்லலாம். காரணம் அவருடைய துடிப்பு மிக்க ஆட்டம், பேட்டிங் ஸ்டைல், களத்தில் பதற்றமடையாமல் இருக்கும் விதம், அருமையான ஃபீல்டிங் ஆகியவற்றைச் சொல்லலாம்.

• ஏற்கெனவே தேவைக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட கிரிக்கெட்டிற்கு மேலும் முக்கியத்துவம் தருவது தேவையா? இது போன்ற கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருப்பதைவிட, கூடைப்பந்து, கால்பந்து, செஸ், ஹாக்கி போன்றவற்றில் சிறந்து விளங்குவோரை இனம் கண்டு பாராட்டுவோம். அவர்களை ஊக்குவித்து அவ்விளையாட்டுகளை வளர்ப்போம். கிரிக்கெட்டைக்

இம்மாதக் கேள்விகள்:

1. பாடப் புத்தகம் அல்லது நோட்டுப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் எழுதி வைத்துக் கொள்ள உற்சாக மான தன்னம்பிக்கையூட்டும் இரண்டு வரிகளைச் சொல்லுங் கள்.
2. மகாகவி பாரதியார் எத்தனை முறை (எத்தனை ஆண்டுகள்) சிறை சென்றிருக்கிறார்?
3. இந்தக் கோடை விடுமுறையில் நடந்த ஒரு சுவையான அனுபவம்...
4. 'உழைப்பு' என்று சொன்னதும் உங்கள் நினைவுக்கு வருபவர் யார்? ஏன்?
5. ஊசியிலைக் காடுகள் என்றால் என்ன? இந்தியாவில் அவை எங்குள்ளன?



ஒருவரே ஐந்து கேள்விகளுக்கும் பதில் அனுப்பலாம். ஆனால் ஓர் அஞ்சலட்டையில் ஒரு கேள்வி - பதில் மட்டுமே இருக்க வேண்டும். படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரி அவசியம். **'அன்புடன் ஜக்கு'** என குறிப்பிட்டு அனுப்பவும்.

முடிவு தேதி: **10.5.2007**

கொஞ்சம் மறப்போமே!

– யாழினி அன்புமணி,
எட்டாம் வகுப்பு,
கலைமகள் கல்வி நிலையம்
மெட்ரிக் பள்ளி,
ஈரோடு

(கோபமாகச் சொன்னாலும் நல்ல கருத்து வரவேற்போம்!)

3. ராஜஸ்தான் மாநிலத்தின் தலைநகர் எது?

ஜெய்ப்பூர்

– ஆர்.காயத்ரி,
ஒன்பதாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி,
கோவில்பட்டி.

– ஆர். கனகல் அஹமது,
பத்தாம் வகுப்பு,
நாகமணியம்மாள் நினைவு
மே.நி.பள்ளி,
கம்பம்

4. பதட்டம், பதற்றம் எது சரியான தமிழ்ச் சொல்?

பதறுதல், பதறாத காரியம் சிதறாது போன்ற வார்த்தைகளைக் கவனியுங்கள். ஆகவே பதற்றம்தான் சரியான தமிழ்ச் சொல். 'பதட்டம்' என்பது மருவுச் சொல்லாகும்.

– இரா.சு.பிரகாசம்,
லாலாப்பேட்டை

– எஸ்.உதயமூர்த்தி,
பனப்பாக்கம்.

5. இராமரின் மனைவி சீதை. லட்சுமணன், பரதன், சத்துருக்னன் ஆகியோரின் மனைவியர் பெயர்கள் தெரியுமா?

லட்சுமணன் மனைவி – ஊர்மிளை

பரதன் மனைவி – மாண்டவி

சத்ருக்னன் மனைவி – ஸ்ருத கீர்த்தி.

– ரா. ரோசினி,
நான்காம் வகுப்பு
ஊராட்சி ஒன்றிய
தொடக்கப்பள்ளி, காயக்காடு

– மோனவிசா எடின்பரோ,
ஒன்பதாம் வகுப்பு,
செயின்ட் தெரசா மெட்ரிக்
மே.நி.பள்ளி,
மும்பை



பெரியவர்கள் சொன்ன குட்டிக் கதைகள்: 2

ஒரு கைப்பிடி!

ஒரு நாட்டில் பல ஆண்டுகளாக மழையே பெய்யவில்லை. அதனால் எங்கும் வறட்சி. மக்கள் பட்டினியால் வாடினர். அச்சமயம் ஒரு ஞானி அந் நாட்டுக்கு வந்தார். அவரைச் சந்தித்த மன்னர், வறுமை நீங்க வழி கேட்டார். ஞானி, "கடவுள் சன்னிதானத்துக்கு முன்பு ஒரு ஹோம குண்டத்துக்கு ஏற்பாடு செய். மக்களை அங்கே வரச் செய்து, அவர்களில் யார் நல்லவர்களோ அவர்களை ஒரு கைப்பிடி சாம்பிராணியைத் தீயில் போடச் சொல். வெண்புகை வரும்; மழை பெய்யும்" என்றார்.

மன்னர் அதன்படியே ஏற்பாடுகளைச் செய்தார். தனது மந்திரியை அழைத்து ஹோம குண்டத்தில் சாம்பிராணியைப் போடச் சொன்னார். அப்படியே செய்ய, அதிலிருந்து நட்டுவாகலியும், தேளும் வந்தன! அதனால் பயந்து யாருமே சாம்பிராணியைப் போட முன்வரவில்லை.



அப்போது அங்கே ஒரு சிறுமி வந்தாள். அவள் ஓர் அனாதை. பிச்சையெடுத்துக் காலத்தை ஓட்டுபவள். தான் சாம்பிராணியைப் போடுவதாகச் சொன்ன சிறுமி, ஹோம குண்டத்தில் சாம்பிராணியைப் போட்டதும் வெண்புகை வந்தது. அது மேலே சென்றது. கருமேகங்கள் தோன்றி, மழை பெய்தது. எல்லோரும் மகிழ்ந்தனர்.

"சிறுமியே, நீ ஏதாவது நல்ல காரியம் செய்திருக்கிறாயா?" என்று மன்னர் கேட்டார்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குக் கிடைக்கும் உணவில் ஒரு கைப்பிடியை ஏதாவது ஒரு பிராணிக்குக் கொடுத்துவிட்டு, பிறகு தான் சாப்பிடுவேன்" என்றாள்.

எல்லோரும் அவளை வாழ்த்தினார்கள்.

• கி.வா.ஜ

'ஓல்மெக்' நாகரிகம்தான் அமெரிக்க நாகரிகத்தின் அடித்தளம்; தாய் வீடு! கி.மு.1500லிருந்து, கி.மு.600 வரை ஓல்மெக்குகள் செழிப்புடன்





வாழ்ந்தனர். ஆனால் கி.மு.20,000 ஆண்டுகளுக்கு முன்னரே, அங்கு மனிதன் வாழ்ந்ததாக, தடயவியல் தகவல்கள் சொல்லுகின்றன. 19-ம் நூற்றாண்டின், இடைப்பகுதியில் (கி.பி.1862) நிறைய தடயங்கள் கிடைத்தன. 'ஒல்மெக்கு'கள் என்றால், 'ரப்பர் மக்கள்' என்று பொருள். ஒல்மெக்குகள், ரப்பரினாலான பந்து மற்றும் பிற பொருட்களைப் பயன்படுத்தினர். இவர்களின் பந்து விளையாட்டு மிகவும் புகழ்பெற்றது. பந்து விளையாட்டின் போது, பந்தை கைகளால் தட்டாமல், முழங்கை, இடுப்பு, தலை, தொடையால் தட்டி விளையாடுவார்களாம். இதனைப் பற்றிய குறிப்புகள் சித்திர எழுத்துகளில் காணப்படுகின்றன. இவர்கள் கி.மு.1600-ல் பயன்படுத்திய பந்துகள். 'எல்மனாட்டி' நகரில், ஏராளமாய்க் கிடைத்துள்ளன.



ஒல்மெக்குகள், மத்திய அமெரிக்காவின், மெக்சிகோவில் வாழ்ந்தனர். தாழ்வான சதுப்புநிலப் பகுதி இது. சுற்றிலும் குன்றுகளாலும், மலைத் தொடர்களாலும், எரிமலைகளாலும் சூழப்பட்டது. வடக்கே உயர்வான 'டெக்ஸ்ட்லாஸ்' மலையும், 'கேம்பெக்' வளைகுடாவும் எல்லைகள்.

ஒல்மெக் கலாசாரம் 'சான் லோரன்சோ'வை மையப்படுத்தியது ஆகும். இங்கும் ஆற்றுப் படுகையை ஒட்டியே நாகரிகம் வளர்ந்தது. இங்கு சோளம், பீன்ஸ், சுரைக்காய் போன்றவை பயிரிடப்பட்டன.

ஒல்மெக்குகளில், மக்கள் பலதரப்பட்ட அடுக்குகளில் வாழ்ந்தனர். வாணிபம் செய்வோர், வானவியலார்,

சக்கர காலண்டர்!



கணித சாஸ்திரம் பார்ப்போர் மற்றும் ஆட்சியாளர்கள், நகரின் மையப் பகுதிகளில் வாழ்ந்தனர். பின் பரவலாகவும், கிராமங்களிலும், மீனவர்கள், விவசாயிகள், கைவினைஞர்கள், சிற்பிகள் வாழ்ந்தனர். பிரமிடுகள் புனித இடமாக போற்றப்பட்டன. சோளமே இவர்களின் முக்கிய உணவாக இருந்தது. இருப்பினும், கடற்கரையை ஒட்டி வாழ்ந்தவர்கள் மீன், ஆமைகள், மான், நாய், நண்டு போன்றவற்றையும் உண்டனர்.

ஒல்மெக்குகளின் அற்புதமான பழக்கமே அவர்களின் சித்திர எழுத்துகள்தான்! ஒருநாளின், நிகழ்வுகளை குறித்து வைக்கவும், அதைச் சொல்லவும் சித்திர எழுத்துகளைப் பயன்படுத்தினர்.



• போர் வீரர்கள்

ஒல்மெக்கின் உயர்தட்டு மக்கள் ஆடம்பர, அலங்கார கலைப் பொருட்களைப் பயன்படுத்தினர். அவற்றில் முக்கியமானது 'ஜேடு' என்னும் மதிப்பு மிக்க பச்சைக் கல்லும் மேக்னைட் என்னும் கல்லுமே! இவற்றில் நுணுக்கமான, கலை வேலைப்பாடுகளைச் செய்தனர். இதனை நோக்கும்போது, ஒல்மெக்குகள், மெசபடோமிய மக்களுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருக்கலாம் என்பது தெரிய வருகிறது.

ஒல்மெக்குகள், மரம், எரிமலைக் கற்கள், ஜேடு கல் மூலம் அழகான சிலைகள் வடித்தனர். அமெரிக்க நாகரிகங்களில் பழைமையானவை இவ்வகைச் சிற்பங்களே! ஒற்றைக் கறுப்புக் கல்லில், பெரிய 'தலை' உருவங்கள் செய்யப்பட்டன. இத்தலைகள் சுமார் 5 அடியிலிருந்து 11 அடி உயரம் வரை இருந்தன. தலை என்பது அவர்களின் ஆட்சியாளர்களையும் தியாகத்தையும் குறிப்பதாக இருந்தது. தலைகளுடன் கூட்டம்

கூட்டமாகப் போர் வீரர்கள் சிலைகளும் இருந்தன. பந்து விளையாட்டுச் சிலைகளும் உள்ளன.

ஓல்மெக்குகள், தங்களை ஆண்டவர்களை பிரம்மாண்டமாய்ச் சித்தரித்தனர். இயற்கையை மிஞ்சிய சக்தியாளர்களாய்க் கருதினர்.

'ஜாகுவார்' என்ற புலி உருவத்தை வழிபட்டனர். ஜாகுவார் புலியையே சூரியன், வானம், காற்று, பூமி, உற்பத்தி, போர், அனைத்துக்குமான கடவுளாக பாவித்தனர். இதனுடன் குட்டி தேவதைகளையும் வழிபட்டனர். சில உருவங்கள் பாதி மனிதனாகவும், பாதி விலங்காகவும் இருந்தன.




• சித்திர எழுத்துகள்

'பாசால்ட்' என்ற பிரம்மாண்ட சிற்பங்களின் உதடுகள், நீக்ரோக்களின் உதடுகள் போல் தடிப்பாக, பெரியதாய்க் காணப்பட்டன. மூக்குகள் அகன்று, சப்பையாய் இருந்தன. எனவே ஓல்மெக்குகள், ஆப்பிரிக்காவிலிருந்து வந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. மேலும், இவர்கள் பேசிய மொழியும், ஆப்பிரிக்க 'மாலி' மொழியையே ஒத்திருந்தது.

ஓல்மெக்குகள் கொக்கோ, ரப்பர், உப்பு போன்றவற்றை வாணிபம் செய்தனர். இவர்களின் வீடுகள் தள்ளி, தள்ளி இருந்தன. வீடுகளின் அருகே மருத்துவ மற்றும் உணவுக்கான தாவரங்கள் வளர்க்கப்பட்டன. பழ மரங்கள், கோக்கோ, சோளம், பீன்ஸ், சுரை, சர்க்கரைவள்ளி, பருத்தி போன்றவை பயிரிடப்பட்டன. பறவைகளை விளையாட்டில் பயன்படுத்தினர்.

ஓல்மெக்குள் கணிதத்தில் விற்பன்னர்கள். நீளமான காலண்டர்கள் தயாரித்தனர். காலண்டரைக் குறிக்கவும் சிற்பங்கள் உள்ளன. ஓல்மெக்குகள் 365 நாட்கள் உள்ள 'ஹாப்' காலண்டரையும், 260 நாட்கள் உள்ள புனித காலண்டரையும் பயன்படுத்தினர். ஓல்மெக்குகள், சைக்கிளில் உள்ள இரு சக்கரங்கள் போல ஐம்பத்திரண்டு வருட சுற்று காலண்டரை உருவாக்கினர். இவர்களின் புனித எண் கூட ஐம்பத்திரண்டுதான்! இவர்களின் நீள காலண்டரில், புள்ளிகள், சின்ன கோடுகள் உள்ளன. இவர்களின் வானவியல் கணக்கீடு, நட்சத்திர மண்டல துல்லியமான வரைவு... இன்றைய தொலைநோக்கி மூலம் பார்ப்பது போலவே குறிக்கப்பட்டுள்ளது!



• சக்கர காலண்டர்



அனைத்தும் அளிக்கும் கோகுலம்!



'பேஜார்' என்பதன் அர்த்தத்தை என் தோழிகளிடம் சொன்னேன். அவர்களும் கோகுலம் வாங்கிப் படிக்க ஆரம்பித்துவிட்டனர். இது போன்ற பயனுள்ள தகவல்களைத் தொடர்ந்து அளியுங்கள்!

- ஜா.பானுப்ப்ரியா,
பன்னிரண்டாம் வகுப்பு,
இந்து நாடார் பெண்கள்
மே.நி.பள்ளி, சிவகாசி

அன்பை அளிப்பார் தாய்,
பண்பை அளிப்பார் ஆசான்,
ஊக்கம் அளிக்கும் விளையாட்டு
அனைத்தும் அளிக்கும் 'கோகுலம்'

- ஜி.சாய்லக்ஷ்மி,
எட்டாம் வகுப்பு,
ஸ்ரீ சாரதா மெட்ரிக்குலேஷன்
மே.நி.பள்ளி,
அரியகுளம்

என்னிடம் டியூஷன் படிக்கும் மாணவர்களின் படைப்புகளைத் தொகுத்து அனுப்பினால் வெளியிடுவீர்களா?

- ச.விமல்,
வரகூர்

(தாராளமாக அனுப்புங்கள். தகுதியானவை நிச்சயம் வெளியிடப் படும் - ஆர்)

தெரிந்துகொள்வோம் பகுதியில் 'முட்டாள்கள் தினம்' உட்பட ஏப்ரல் மாதத்தின் பல்வேறு தினங்களை



அறிந்து கொள்ள முடிந்தது. கோகுலத்துக்கு ஸ்பெஷல் தேங்க்ஸ்!

- வி.வேல்முருகன்,
முத்தம்பட்டி கேட்




தேன்மொழி–கனிமொழி
கருத்து, படம் : பிள்ளை
தேனோட அம்மா ஊருக்குப் போயிருக்காங்க, நாமதான் அவளுக்குச் சமைச்சுத் தரணும்!
தேனுக்கு தோசைன்னா இஷ்டம். அவளோட சொத்துக்களான கார், டெடிபேர் பொம்மைகளையே...
... என் பேருக்கு எழுதி வெச்சாலும் ஆச்சர்யமில்லே. சே! யார் அது இந்நேரத்துல பெல் அடிக்கறது?
தேனு, ஐயா பண்ணின சூப்பர் மசாலா தோசை ரெடி! சாப்பிட வர்றியா?
ஸாரி, கனி! வீட்டுச் சாப்பாடு அலுத்துப் போச்சு. அதான் இத்தாலி தோசை ஆர்டர் பண்ணேன்...
... வாவ்! 'பீட்ஸா' சூப்பர்! இதுக்காக சொத்தையே எழுதி வைக்கலாம்.


"நீச்சல் குளம்
போகலாம்;
நீந்தி நீந்தி
மகிழலாம்!"





"வாளியை
நீச்சல்
குளமாக்கலாம்;
வாகாய்
அமர்ந்து
குளிக்கலாம்!"

என்ஜாய் ஹாலிடேஸ்!



"யோகா
வகுப்பு
செல்லலாம்;
உடலை
உறுதி
செய்யலாம்!"

Registered with the Registrar of Newspaper of India under No. 24260/72 Registered No. TN/CC(S)DN/109/06-08 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/06-08 • Registered as a Newspaper in Srilanka

